www.tamilarangam.net



பல்முனைப்பேட்டி

குமார் பொன்னம்பலம்

Registered In Sri Lanka

விலை ரூபா 12. 50

இலங்கையிலிருந்து வெளியாகும் ஜனரஞ்சக மாத இதழ்.


# அருவி

இதழ் - 6

92 ஆடி 25 - ஆவணி 25

## பாராளுமன்றத் தெரிவுக்குழு?





எஸ். எல். எஃப். பி

ஏபெக்ஸ் கவுன்சில்.


ஆப்பானிஸ்தானின் எதிர்காலம்.

சிறப்புக் கட்டுரை: ஒரு மேதையின் ஆளுமை.

ARUVI - A POPULAR ... FROM SRI LANKA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்றி: சுபமங்களா

www.tamilarangam.net

## உள்ளடக்கம்



ரஷ்ஷிய உதவியுடன் பதவியில் இருந்த அரசுக் கெதிராக 13 வருட கால யுத்தத்தின் பின் முஜாகிதீன்கள் வெற்றியீட்டியபின் ஆப்கானிஸ் தானின் எதிர்காலம் பற்றிய ஓர் நோக்கு......



உலகப் புகழ் பெற்ற வங்காள திரைப்பட இயக்குனர் சத்தியஜித்ரே காலமானார். அவர் பற்றியும் அவரது திரைப்படம் பற்றியும்.....



இனப்பிரச்சினையும் அதன் தீர்வுகள் சம்பந்தமாகவும் தனது கருத்துக்களை கூறுகின்றார் குமார் பொன்னம்பலம்.


வாசகர் கடிதம்........................................ 2

இதைக்கொஞ்சம் கேளுங்கள்............ 3

நாட்டு நடப்புகள்:
எஸ். எல். எஃப். பி யின் பாராளுமன்றத்தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு.......... 4

உலக அரசியல்:
ஆப்கானிஸ்தானின் எதிர்காலம்............6

சினிமா:
ஒரு மேதையின் ஆளுமை.................... 9

விளையாட்டு:
ஒலிம்பிக் .............................................. 14

நாட்டு நடப்புக்கள்:
வடக்கையும் கிழக்கையும் பிரிக்கின்ற ஏபெக்ஸ் கவுன்சில்.............................. 15

பல்முனைப் பேட்டி
குமார் பொன்னம்பலம் ...................... 17

சிறுகதை:
சம்பள நாள் ........................................ 20

அறிமுகம் : மனிதம்
8ம் நம்பரும் 7 1/2 சனியனும்.......... 25

சிந்தனை :
மரணங்கள் மதிப்புமிக்கவை............. 27

கவிதாப்பிரவாகம் .............................. 31




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த இதழில் வெளியான தவறொன்றைச் சுட்டிக்காட்டி விளக்கமளிக்கிறார் ஒரு நேயர்.

அஷ்ரப் அவர்களின் பேட்டியில் என்னால் சுட்டிக்காட்டப்பட வேண்டிய தவறொன்றுள்ளது. அதாவது "முஸ்லீம்கள் எங்கும் தக்மீர் (தக்மீர் அல்ல தக்பீர், அச்சுப் பிழையாக இருக்கலாம்.) செய்யப்பட்ட இறைச்சியைத்தான் உண்பர்" என்றிருந்தது. அதற்கு விளக்கமாக அடைப்புக் குறிக்குள் (அஷ்ரப்பினது விளக்கமோ, உங்களது விளக்கமோ தெரியாது) "பள்ளியால் மந்திரிக்கப்பட்ட இறைச்சி" என்றிருந்தது. அவ்வாறு ஒன்றும் நடைபெறுவதில்லை. மந்திரித்தல் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டமே வேறு. அது விசாலமான விடயம்.

பொதுவாக முஸ்லிம்கள் மரபு ரீதியிலான பேச்சில் "தக்பீர் சொல்லி அறுத்தல்" (தக்பீர் என்பதற்கு மொழி ரீதியில் வேறு கருத்துக்கள் உண்டு) என்பது "இறைவனின் பெயர் சொல்லி அறுத்தல்" என்பதாகும். முஸ்லிம்கள் எதனையும் ஆரம்பிக்கும் போது "இறைவனின் பெயர் சொல்லியே" ஆரம்பிப்பார்கள், என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். வேறு சில மதத்தவரும் இறை வாழ்த்துப் பாடி ஆரம்பிப்பது போல.

முஸ்லிம்கள் பின்வருமாறு கூறித்தான் எதனையும் ஆரம்பிப்பார்கள். (அறுத்தல் உட்பட)

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" - "Bismillahir Rahmanir Raheem" (In the name of Allah the merciful the Compassionate)

- M. K. M. ஷாகீப் -

அருவியின் தரம் குறைந்து வருவது போல் நான் உணர்கிறேன். எனவே தரத்தைக் கூட்ட முயலவும். அத்துடன் கிரமமாக அருவியை கொண்டுவர முயலவும். அருவி உடனுக்குடன் தரமான ஆக்கங்களுடன் கிரமமாக வெளிவருமானால் இங்கு பலரும் தேடி வாங்குவார்கள். இலங்கையிலிருந்து வரும் ஒரு முற்போக்கு சமூக அரசியல் சஞ்சிகை என்ற வகையில் இங்கு ஒரு வரவேற்புள்ளது

-நேசன் கனடா-

சினிமா விமர்சனம் சினிமாத் தனத்துடன் செல்ல வேண்டும். புத்தி ஜீவிகளுக்கான புத்தகமென்றோ அல்லது புத்திஜீவிகளால் வெளியிடப்படும் புத்தகமென்றோ வாசகர்களிடையே கருத்து ஏற்படுவது ஆரோக்கியமானதென நான் நம்பவில்லை. பிரபல எழுத்தாளர்களின் தொடர்கதை ஒன்றை சேர்ப்பது வாசகர்களை தொடர்ந்து வாசிக்கத் தூண்டும். உங்கு நிகழும் கலை நிகழ்ச்சிகளில் சிறப்பானவை பற்றிய விமர்சனங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கிருபாகரன் - பிரான்சு

அருவிக்கு வரும் கடிதங்களில் பெரும்பாலானவை வெறும் புகழுரைகளாக இருப்பதால் அவற்றையெல்லாம் பிரசுரிப்பது பயனுடையதாக நாம் கருதவில்லை. எனினும் வாசகர்களின் கருத்துக்களை அறியத்தருவதும் ஆரோக்கியமான சம்பாஷனையை ஏற்படுத்துவதும் அவசியமான காரியமாகும். இந்த வகையில் வாசகர்களின் ஒருசில கடிதங்களை இம் முறை பிரசுரித்து தொடரும் தொடர்ந்த இதழ்களில் இதை வளர்த்துச் செல்லலாம் எனக் கருதுகிறோம். நேசன் குறிப்பிட்டவாறு அருவியின் தரம் குறைந்துள்ளது போல் தோன்றக் காரணமுண்டு. ஆரம்ப அருவி இதழ்கள் கூடுமான பகுதி அரசியல் பிரச்சனையளைத் தாங்கி வெளிவந்தன. தற்போது வெளிவருபவற்றில் கலை இலக்கியம், மற்றும் இதர அம்சங்கள் கணிசமான அளவு கூட்டப்பட்டுள்ளன. இது அரசியலை கூடுதலாக எதிர்பார்ப்பவர்களுக்கு தரம் குறைந்தான தோற்றப்பாட்டை கொடுத்திருக்கலாம். மக்களை மாணக்கர்களாக்கி போதனை செய்யும் மனோபாவத்தில் சஞ்சிகையின் ஆக்கங்களை வடிவமைப்பதை நல்ல தன்மையாக நாம் கருதவில்லை. அவர்கள் உணர்வுபூர்வமான ஈடுபாடு காட்டும் வகையில் இதை அமைக்க வேண்டும் என்பது எமது கருத்தாகும். ஆனால் தரம் குறைவதாக நீங்கள் குறிப்பிட்டது குறிக்கப்பட்ட ஏதாவது ஆக்கங்களில் உள்ள குறைபாடுகளாக இருக்கும் பட்சத்தில் அவற்றை நாம் பரிசீலித்தாக வேண்டும். அப்படியானால் நீங்கள் எந்தெந்த ஆக்கங்களில் என்னென்ன குறைபாடுகளை காண்கிறீர்கள் என குறிப்பிட்டு எழுதுவது எமக்கும் வாசகர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். கிருபாகரனுடைய கடிதத்தில் குறிப்பிட்ட சினிமா விமர்சனம் என்பதைப் பொறுத்தவரை, மக்களின் ரசிகத் தன்மையை அறிவுபூர்வமான கலாரசனையாக வளர்ப்பது என்ற நோக்குடன் விமர்சனங்களை அமைக்க விரும்புகிறோம். இது புத்திஜீவிகளுக்காக மட்டுப்படுத்தப் பட்டதல்ல. தொடர்கதையைப் பொறுத்தவரை ஆசிரியர் பிரபலமானவர்களோ இல்லையோ நல்ல கதையம்சம் உள்ளதாக தென்படுமானால் வெளிக்கொணரத்தயார் திரு சஹீப் சொற்பிழை ஒன்றை இட்டு காட்டிய அக்கறையை வரவேற்கிறோம். மேலும் கடிதம் எழுதிய அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.

அருவியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
அருவி
த.பெ.இல. 1354
கொழும்பு.

விநியோக ஏஜென்டுகள் விண்ணப்பிக்கவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இதைக் கொஞ்சம் கேளுங்கள்

வடக்கில் யுத்தம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. இனப்பிரச்சனைத் தீர்வுக்கான தெரிவுக்குழு கூட்டங்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இந்தியா புலிகளைத் தடைசெய்திருப்பதுடன் ராஜீவ் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட விடுதலைப்புலிகளின் தலைவர்களை நாடுகடத்தும் படி கோருவதற்கான சட்ட நுணுக்கங்களை தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இதன் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தொண்டமான், கத்தோலிக்கத் தலைவர்கள், புத்தபிக்குமார் என்று மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்து போயின.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வா இராணுவத் தீர்வா என்ற கருத்தில் ஆட்சியாளர்கள் மத்தியில் நிட்சய மற்ற நிலமை, அல்லது ஒருசாரார் ஒன்றையும் மற்றய சாரார் இன்னொன்றையும் வலியுறுத்தும் நிலமை இருப்பதாகவே தெரிகிறது. யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவத்தாக்குதல்களின் போது சில ஆட்சியாளர் தரப்புக் கருத்துக்கள் புலிகளை இராணுவ ரீதியில் முறியடித்த பின்னரே அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும் என்று கூறுவதாக பத்திரிகை செய்திகள் வெளிவந்துள்ளன. அதேவேளை தெரிவுக் குழுவில் ஒரு இணக்கமான முடிவு ஏற்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் கூறப்பட்டு அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அக்கூட்டங்கள் நிகழ்ந்து கொண்டும் இருக்கின்றன.

தெரிவுக் குழுவில் ஒரு அரசியற் தீர்வுக்கான இணக்கத்தை எட்டுவதற்கான நம்பிக்கை தரக்கூடிய அறிகுறி ஒன்றும் இன்னும் ஏற்படவில்லை. அதில் இப்போது பிரதானமாக எழுந்துள்ள பிரச்சனை வடக்கையும் கிழக்கையும் இணைப்பதா பிரிப்பதா என்பதே. வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட 13ம் திருத்தச்சட்டத்தின் மாகாண சபைச் சட்ட மூலத்திலிருந்து மேல் நோக்கிய திசையில் தீர்வுக்கான புள்ளி இருக்க முடியுமேயன்றி கீழ் நோக்கிய திசையில் இருக்க முடியா தென்பதை முதலில் இது பற்றி சிந்திப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இங்கு உரிமைக்காகப் போராடும் தமிழ்ப்பேசும் மக்கள் தமக்கு கிடைத்திருந்த ஒன்றே ஒன்றையும் இழந்து விட ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இது புரியாமல் அண்மையில் வடக்கும் கிழக்கும் பிரித்து நிர்வகிக்கப்படும் ஒரு யோசனையை தெரிவுக்குழுவின் செயலகம் முன்வைத்திருந்ததும் அதனை அனைத்து தமிழ் கட்சிகளும் தொண்டமானும் எதிர்த்ததும் தெரிந்ததே.

இங்கு வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படுவதற்கான என்ன அவசியம் உள்ளது என்ற கேள்விக்கு பெரும்பான்மையினர் தரப்பில் சில வினோதமான பதில்கள் உள்ளன. அதிலொன்று இரண்டையும் சேர்த்து விட்டால் தனிநாடாகப் பிரிந்து விடும் என்பது. தேவைகள் நிறைவு செய்யப்படாத பட்சத்தில்தான் போராட்டங்கள் உருவாகின்றன. மக்களின் அபிலாசைகள் நிறைவு செய்யப் படுகையில் போராட்டத்துக்கான தேவை அற்றுப் போய்விடும் என்பதையும், மாறாக அது மறுக்கப்படும்போதுதான் அது போராடத் தூண்டும் என்பதையும் புரிந்து கொண்டு இப் பிரச்சனையில் வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிடுவது நிரந்தர சமாதானத்தை தருமா என்பதை இவர்கள் சிந்திக்க வேண்டும். மேலும் தமிழ்க் கட்சிகள் வாதிடுவது போல் மற்றய மாகாணங்கள் விரும்பினால் விருப்பப்பட்டவை சேர்ந்து கொள்வதை இவ்வளவு கடுமையான பிரச்சனையாக இவர்கள் பார்ப்பார்களா என்பதையும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்த இன்னொரு வாதம் இப்பகுதியில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகள், பாதுகாப்பு என்னாகும் என்ற கேள்வியாகும். இதில் தமிழ் கட்சிகள் கேட்கும் ஒரு சிந்திக்கத்தக்க கேள்வி: வடக்குக் கிழக்கு மாகாணத்துக்குள் வாழப் போகும் 3 லட்சம் சிங்கள மக்களின் கதி பற்றி இப்போது சிந்திக்கும் இவர்கள் வடக்கு கிழக்கிற்கு வெளியே சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்ற 20 லட்சம் தமிழ், முஸ்லீம் மக்களது உரிமைகள், பாதுகாப்பு தொடர்பாக இதுவரையில் சிறுபான்மையினர் எவரும் அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு ஒழுங்கமைப்பைக் கோரவில்லை, பெரும்பான்மையினர் தாமாகவே உணர்ந்து அதைச் செய்து கொடுக்கவும் (இத்தனை கலவரங்கள் நிகழ்ந்து முடிந்து விட்ட பின்னும்) முன்வரவில்லை என்பதை மனசாட்சியின் பக்கத்தில் சற்று எடுத்துப் பார்த்துள்ளார்களா? என்பது. மேலும் மூன்று லட்சம் சிங்கள மக்கள் இங்கு வசிக்கிறார்களென்பதற்காக காலாகாலமான பாரம் பரிய உறவுகளைக் கொண்டிருக்கும் மற்றய மக்கள் இணைந்து வாழக் கூடாது என்பது நியாயமுள்ள ஒரு வாதமுமல்ல. இருப்பினும் இச் சிங்கள மக்களுக்கு நாட்டின் ஏனய பகுதிகளில் ஏனய சிறுபான்மையினருக்கு இருக்கும் எல்லா உரிமைகளையும் உத்தரவாதம் செய்யத் தயார் என்று தமிழ்கட்சிகள் நாலம்சத் திட்டத்தில் வழிவகை கூறியுள்ளன. அதேவேளை சிங்கள மக்கள் வாழும் பகுதிகளை அவற்றை ஒண்டியிருக்கும் சிங்கள மாகாணங்களோடு இணைத்துவிடும் வழிவகைகள் பற்றியும் சிந்திக்கப் படுகின்றன. எனவே இவை யெல்லாம் வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டுமென்பதற்கான வலுவான காரணங்களல்ல.

இந்நிலையில் இனப்பிரச்சனையின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடை பெறுகின்ற ஒரே களமான தெரிவுக்குழுவில் சரியான ஒரு ஒருமித்த தீர்வு எட்டப்படுமா என்பது ஒருபுறம் கேள்வியாக நிற்க மறுபுறத்தில் நடந்து கொண்டிருக்கும் இந்த யுத்தம் அரசால் எவ்வாறு எளிக் கையாளப் படப் போகிறது என்பது இன்னொரு கேள்வியாக நிற்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எஸ். எல். எஃப். பி யின் பாராளுமன்றத் தெரிவுக்குழுப் பகிஷ்கரிப்பு ஒரு ஸ்டண்ட் விளையாட்டு.

பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சியோடு கோபித்துக் கொண்டால் தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கவென்று நீங்களே சிபாரிசு செய்து உங்கள் பிரதிதியே தலைமை வகிக்கும் தெரிவுக்குழுமீது ஏன் உங்கள் கோபத்தைக் காட்டினீர்கள்? எஸ். எல். எஃப். பி காண்பித்துச் சென்றுள்ள இந்தத் தவறான முன்னுதாரணம் சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளுக்குள் நிலவுகின்ற உளப்பாங்கினை வெளிவாரியாக காண்பித்து விட்டது. இன்று இந்த நாட்டைக் கொந்தளிப்பில் வைத்திருக்கும் இனப்பிரச்சனையென்பது எந்தளவு முக்கியத்துவமானது என்பதுவும் இப்பிரச்சனையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களுடன் விடிவுக்காக ஏங்கி நிற்கும் தமிழ்ப் பேசும் மக்களும் இந் நாட்டின் மக்கள்தான் எனச் சொல்லிக் கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான ஒரு தீர்வு என்பது எத்தனை அவசியமும் அவசரமுமான ஒன்று என்பதுவும், அதே வேளை இப்பிரச்சனையின் பக்கவிளைவுகளாக உருவாகி முழுநாட்டு மக்களையுமே உறுஞ்சுகின்ற யுத்த வரிகளும், விலைவாசியின் படுவேக உயர்வும், வெளிநாட்டுக் கடன் பழுவும் அத்துடன் வெளிநாட்டு நிபந்தனைகளுக்கு மண்டியிட வேண்டிய பொருளாதார இக்கட்டு நிலையும் நாட்டின் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவல்ல ஒரு கட்சியாகத் தம்மைப் பிரகடணப் படுத்திக் கொண்ட இவர்களின் கவனத்திலிருந்து தவறிப்போகுமளவுக்கு அலட்சியமானதாக இருந்திருக்கிறது என்பது வேதனைக்குரியது.

• பாராளுமன்றத்தில் இவர்கள் எழுப்பிய பிரச்சனை நியாயமானதாக இருக்கலாம். ஆனால் அதற்காக தெரிவுக்குழுவை பகிஷ்கரிக்க முடிவெடுத்தது எவ்விதத்திலும் நியாயமில்லை. இவர்களின் பிரச்சனைக்கும் தெரிவுக்குழுவுக்கும் எந்தத் தொடர்புமில்லை. இது வெறுமனே ஒரு ஸ்டண்ட் விளையாட்டு. அதாவது அப்படிப் பகிஷ்கரிப்பதாக அறிவித்தால் பல தரப்பாலும் இம்முடிவை கைவிடும்படி இவர்களைக் கெஞ்சிக்கேட்டு அறிக்கைகள் வெளிவரும். அப்போது ஒரு பரபரப்பான வகையில் அவர்கள் பற்றிய செய்திகள் செய்தித்தாள்களில் வந்து கொண்டிருக்கும். அதனால் தங்களை ஒரு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக வெளிக்காட்ட முடியும். இதுமட்டும் தான் இதிலிருக்கக்கூடிய நோக்கம். இப்போது இந்த ஸ்டண்ட்டை கொஞ்சம் பிசு பண்ணிக் கொண்டு சில காலம் இழுத்து முடித்துக் கொண்டு மீண்டும் தெரிவுக்குழுவுக்கு இவர்கள் வந்துவிட்டமை வரவேற்க வேண்டியது ஒன்றுதான். ஆனால் மனதிலே சற்று வருத்தத்தோடுதான்.

> பாராளுமன்றத்தில் இவர்கள் எழுப்பிய பிரச்சினை நியாயமானதாக இருக்கலாம். அதற்காக தெரிவுக் குழுவை பகிஸ்கரிக்க முடிவெடுத்தது எந்த விதத்திலும் நியாயமில்லை.
>
> எஸ். எல். எஃப். பியின் முடிவால் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டார் மங்கள முனசிங்கதான்.

மே மாதம் கூடிய பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் விவாதிக்க வேண்டுமெனக் கோரிய விடயங்களை அரசாங்கம் மறுத்தமைதான் இப் பிரச்சனையின் ஆரம்பம். மூன்று விடயங்கள் தொடர்பாக எதிர்கட்சியினர் விவாதத்தைவேண்டி அனுமதி கோரினர். ஒன்று முன்னால் உதவிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அரசாங்கத்திற்கு எதிராக வெளியிட்ட வாக்குமூலம் தொடர்பாக. இவ் வாக்குமூலத்தில் முன்னால் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவின்கொலை பல கசினோ சூதாட்ட கிளப்புகளது நடவடிக்கைகள் அரசியல்வாதிகளின் தலையீடுகள் என பல பாரதூரமான விடயங்கள் அடங்கியிருந்தன. எனினும் உடுகம்பொல தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந் நிலையில் இவ் விவகாரங்கள் பகிரங்கமாக விவாதிக்கப்படக் கூடாது என்று கூறும் சட்ட விதியைக் (சப்ஜுடிசே) காரணம் காட்டி இதை விவாதிக்க அரசாங்கம் மறுத்துவிட்டது. இரண்டாவது, தேர்தல்ஆணையாளரால் நடந்து முடிந்த தேர்தல்கள் தொடர்பாக வெளியிடப் பட்ட அறிக்கை பற்றியது. இவ்வறிக்கையில் பல தேர்தல் மோசடிகள் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனை விவாதிக்கவும் அனுமதிக்க மறுத்த அரசாங்கம் வேண்டுமானால் பாராளுமன்றத்தில் இதற்கென ஒரு தெரிவுக்குழு அமைத்து அதில் இதனை ஆராயலாம் என்று தெரிவித்தது.

மூன்றாவது, கணக்காளர் நாயகத்தால் மத்திய வங்கி தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை பற்றியது. இதைப்பற்றி பிரதமர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார். இதன் மீது விவாதம் நடத்தவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரிய போது, இப்படி நடத்தப்படும் விவாதம் சர்வதேச நாடுகளில் இலங்கை பற்றிய தவறான கணிப்பை ஏற்படுத்திவிடும் என்றும் உள்நாட்டில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையை (Explosive Situation) ஏற்படுத்திவிடும் என்றும் காரணம் கூறி பகிரங்க விவாதத்திற்கு மறுத்து விட்ட அரசாங்கம் ஆனால் அதை கொன்சல்டேடிவ் கொமிட்டியில் விவாதிக்கலாம் எனத் தெரிவித்தது.

இவற்றை எதிர்க்கட்சியினர் ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட அமளி துமளியின் பின் எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர்கள் மறுத்தனர். இவற்றை அடுத்து கடந்த மே 21ம் திகதி பாரா

www.tamilarangam.net

ளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தினர்.

புதிய பாராளுமன்றத்தில் நடைபெற்ற முதலாவது சத்தியாக்கிரகம் இதுவாகும். இச் சம்பவம் 1956ல் யூன் 15ம் திகதி பழய பாராழுமன்றத்தின் முன் காலிமுகத் திடலில் முன்னர் தமிழரசுக் கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகத்தை ஞாபகப்படுத்தியது. அந்த அஹிம்சாப் போராட்டம் குன்டாந்தடிப் பிரயோகம் செய்யப்பட்டு வன் முறையால் கலைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல இதைத் தொடர்ந்து எழுந்து தணிந்த இனக் கலவரத்தில் தமிழர்களின் ரத்தம் வடிந்தோடியது. அப்போது ஆட்சிசெய்த அரசு இப்போது சத்தியாக் கிரகமிருக்கின்ற இதே எஸ். எல்.எஃப். பி தான் என்று அடுப்பங்கரை நாட மறுக்கும் சூடுகண்ட பூனையாக தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி மாவை சேனாதிராசா சுட்டிக் காட்டிக் கொண்டு இச் சத்திக்கிரகத்திலிருந்து விலகிக் கொண்டார். இதன் மூலம் பாராழுமன்ற ஜனநாயகம் குறித்து எழுந்த கேள்வியில் தனது நிலையைத் தெரிவிக்காதிருக்கக் கூடிய ஒரு சௌகரியத்தை உருவாக்கிக் கொண்டார்.

விரைவில் சாதகமான முடிவைத் தருவோம் என உறுதியளித்தார்.

இதையடுத்து தமிழ்க் கட்சிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் எஸ். எல். எஃப். பி தலைவி சிறீமாவோ உட்பட பல பிரமுகர்களைச் சந்தித்து இம் முடிவை கைவிட்டு தெரிவுக்குழுவுக்கு சமூகம் தருமாறு வேண்டினர். இருந்தபோதும் இச் சந்திப்புகளின் பின்னர் கூடிய எஸ். எல். எஃப். பி மத்திய கமிட்டி திரும்பவும் தெரிவுக்குழுவை தாம் தொடர்ந்து பகிஷ்கரிக்கப் போவதாகவே முடிவெடுத்தது. இம் முடிவால் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டவர் திரு. மங்கள முனசிங்காதான். ஏனெனில் தெரிவுக் குழுவின் தலைவர் என்ற வகையில் அதைக் கூட்ட வேண்டிய பொறுப்பும் அவருடையது தான். இத் தெரிவுக்குழு யோசனையை பாராளுமன்றத்தில் பிரேரித்தவரும் இவர் தான்.

இதன் பின்னால் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியை சந்திப்பதற்கான முயற்சியில் இறங்கின. இதன்படி கடந்த 15ம் திகதி சந்திக்க ஏற்பாடாகியது. இப்படியான சந்திப்பு முயற்சி நடை பெறும் வேளையில் எஸ். எல். எஃப். பி தனது முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் தெரிவுக்குழுவுக்கு

> எஸ். எல். எஃப். பியினர் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்தில் சத்தியாக்கிரகம் நடத்தினர். புதிய பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற முதலாவது சத்தியாக்கிரகம் இதுவாகும். பழைய பாராளுமன்றத்தின் முன் காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சியினர் நடத்திய சத்தியாக் கிரகத்தை இது ஞாபகமூட்டியது.

இந்த சத்தியாக் கிரகத்தில் எஸ். எல். எஃப். பி பாராழுமன்றத்தில் நீதி கிடைக்கும் வரை தாம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளதாக அறிவித்தது. அப் போது எதிர்க்கட்சிகளின் இந் நடவடிக்கைக்கு ஆதரவளித்து வந்த மற்றோர் தமிழ்க்கட்சியான ஈ. பி. ஆர். எல். எஃப். ன் எம். பி பிரேமச்சந்திரன் இம் முடிவை மாற்றிக் கொள்ளுமாறு விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்த எஸ். எல். எஃப். பி கொரடா றிச்செட் பத்திரன, ஆளும் கட்சிக்காக இல்லாவிட்டாலும் தமிழ்க் கட்சிகளுக்காக தாம் இதைப் பரிசீலித்து இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சிக்கு பாதிப்பில்லாத வகையில் சமூகம் தருவதாக அறிவித்தது. இத்துடன் இந்த தெரிவுக்குழுவில் ஏற்பட்டிருந்த அனாவசியமான முட்டுக்கட்டை நீங்கியது. எனினும் இதன் மூலம் எஸ். எல். எஃப். பி லாபத்தையா, நட்டத்தையா எண்ணிக் கொண்டது என்ற கேள்வியை அவர்களிடம் யாராவது கேட்டால் அரசியலில் இப்படி ஏதாவது செய்து கொண்டுதான் இருக்க வேண்டும் அப்போது தான் நம் பிரபல்யமாக இருக்க முடியும், சில வேளை நட்டம் வரும், சிலவேளை லாபம் வரும். ஒன்றில் நட்டப்பட்டால் இன்னொன்றில் லாபமெடுக்க வேண்டும், ஒன்றுமே செய்யாமல் இருப்பதைக் காட்டிலும் இது சிறந்தது என்று சொல்வார்களோ? □


கிறீன்லண்ட் ரேடர்ஸ்.

அழைக்கிறது-
பலசரக்குச்சாமான்கள்
மீன் வகைகள்
தங்க ஆபரணங்கள்
பட்டுச் சேலைகள்
வேட்டி, சால்வைகள்
ஆண், பெண், சிறுவர்களுக்குரிய நவீன ஆடைகள்
எவர்சில்வர் பாத்திரங்கள்
புதிய, பழைய திரைப்படங்கள்
ஒடியோ கசட்டுக்கள்.

உங்கள் தேவை எதுவாயினும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள

· GREENLAND TRADERS
BEISING STR: 12 A
4300 ESSEN 1
GERMANY.

Tel: 0201/321288
Private Tel: 0234/232527.

திருமண வைபவத்திற்குரிய சகல பொருட்களும் எம்மிடம் கிடைக்கும். திருமணத்திற்குரிய மாலைகள், உணவு வகைகள் ஓடர்களுக்கு குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.

விளம்பரம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆப்கானிஸ்தானின் எதிர்காலம்.



மசூத்

ஜமேத்தே இஸ்லாமி
கடைசிக்கால
சண்டைகளின் போது
மிகவும் பலம்
வாய்ந்ததாயும்
வெற்றிகரமாகவும்
உரு வெடுத்தது.
இதற்கு காரணம்
இதன் தனித்துவம் மிக்க
இராணுவத்தலைவர்
பஞ்சமீர் பள்ளத்தாக்கின்
சிங்கம் என
அழைக்கப்படும் அக்மட்
ஷா மசூத்.
இவர் தற்போதைய
பாதுபாப்பு அமைச்சர்.

ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் இப்போது அதனது கைகளிலேயே தங்கியுள்ளது. ரஷ்ஷியர்களின் உதவியுடன் அதிகாரத்தில் வைப்பக்கட்டிருந்த, கம்யூனிஸ்டுகளிற்கு எதிரான 13 வருட யுத்தத்தின்பின் "முஜாகிதீன்கள்" - ஆண்டவனின் சேனை- வெற்றியீட்டிவிட்டார்கள்.

அன்றைய உலகின் இரு வல்லரசுகள், சோவியத்யூனியனும் அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக சண்டையிட்டு வந்தார்கள். அமெரிக்கர்கள் முஜாகிதீன் போராளிகளிற்கு பாகிஸ்தானிற்கூடாக, குறிப்பாக அன்றைய ஜனாதிபதி ஷிய-உல்-ஹக் காலத்தில் ஆயுதமும் பணமும் அனுப்பி இதைச் செய்துவந்தார்கள். ரஷ்ஷியர்கள் அவர்களாலேயே நியமிக்கப்பட்ட ஆப்கான் ஆட்சித்தலைவர் நஜிபுல்லாவை பலப்படுத்தி வந்தார்கள்.

இந்த விரயத்தனமான யுத்தத்தின்பின் ஆப்பானிஸ்தானில் இன்று விட்டு வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் தொகையோ கிட்டத்தட்ட பாகிஸ்தானும் இந்தியாவும் வைத்திருக்கும் ஆயுதங்களின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.

இன்று பலருக்கு உள்ள சந்தேகம் என்னவென்றால் ஆப்கானிஸ்தானில் அமைதி நீண்டநாள் நிலைக்குமா? என்பதே. அங்குள்ள பூர்வீகக்குழுக்களோ தமக்குள்ளேயே மோதிக்கொள்ளும் நிலையில் உள்ளார்கள். ஆப்கானிஸ்தானை பட்டாணிய இனத்தவரே முன்னர் வழக்கத்தில் ஆண்டு வந்தனர். மற்றைய இனங்களிலிருந்து வந்த தலைவர்களின் ஆட்சி வழக்கிலில்லாத ஒன்று. அப்படி ஒரு போதும் இருந்ததில்லை. 1970களின் பிற்பகுதியில் ஆரம்பித்த ஆப்கானிஸ்தான் பிரச்சனையானது பல இன, மத, அரசியல் குழுக்களை முதலில் சோவியத்யூனியனிற்கும், பின்னர் நஜிபுல்லாவின் கம்யூனிச ஆட்சிக்கும் எதிரான சண்டையில் ஈடுபட வைத்திருந்த போதும் இன்று இக்குழுக்கள் ஒன்றோடொன்று அல்லது ஒரு கூட்டமைப்பு இன்னொரு கூட்டமைப்போடு மோதிக் கொள்ளக்கூடிய ஆபத்திற்கு இட்டு வந்துள்ளது.

எழுபதுகளின் கடைசிப்பகுதியில் சுமார் 15 மில்லியன் ஆப்கானிஸ்தான் மக்களில் மூன்றிலொரு பங்கினருக்கு அதிகமான தொகையினர் அகதிகளாக பிறநாடுகளிற்கு, அதிலும் பெருமளவு பாகிஸ்தானிற்கும் ஈரானி



மீண்டும் முழு அளவிலான மத அடிப்படை வாதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


## இனப் பிரிவு விரிசல்கள்

■ ஆப்கானில் எந்த வனவாசிப் பிரிவுக்கும் பெரிய பெரும்பான்மை இல்லை. பட்டாணியர்கள் கூட மக்கள் தொகையில் பாதிதான்; அதற்குள்ளும் பல உட்பிரிவுகள்.

■ ஆப்கானின் பிரதான வனவாசிப் பிரிவு ஒவ்வொன்றிற்கும் பக்கத்து நாடுகளில் எண்ணற்ற உறவினர்கள் உண்டு.

■ பட்டாணியர்களும் மற்றவர்களும் மொழிவழி பிரிந்திருக்கிறார்கள். பட்டாணியர் பேசுவது புஷ்டு மொழி. மற்றவர்கள் பேசுவது பாரசீகம் போன்ற தாதி என்ற மொழி.

■ மசூதின் ஆட்கள் உஸ்பெகி வடக்கத்தியர்கள். ஹெக்மத்யார் புஷ்டு பேசுபவர்களை சார்ந்திருக்க முயல்கிறார். ஷியா பிரிவு நடுநிலை அது ஈரானின் பிடியில்.





ற்கும் இடம் பெயர்ந்து சென்றார்கள். இப்போது யுத்தத்திற்குப் பின்னால் எழுந்துள்ள ஒரு முக்கியமான பிரச்சனை; இந்த அகதிகளில் எவ்வளவு பேர்கள் நாடு திரும்புவார்கள், அவர்களை எவ்வாறு மீளக்குடியேற்றுவது, தற்போதைய ஒழுங்கமைப்பில் எவ்வாறு அவர்களைச் சேர்த்துக் கொள்வது என்பதாகும்.

ஆப்கானிஸ்தானில் இவ் இனக்குழுக்கள் புவியியல் ரீதியாக பிரிந்து பிரிந்து வாழ்கிறார்கள். வடக்கிலும் மேற்கிலும் தாஜிக், உஸ்பெக், துருக்கோமான் இனக் குழுக்களும், மத்திய ஆப்கானிஸ்தானில் ஹசாரா இனக் குழுவைச் சார்ந்தவர்களும், கிழக்கிலும் தெற்கிலும் புஷ்ட்டு மொழியை பேசுகிற ஆதிக்கம் மிக்க பட்டாணிய மக்களும் வாழுகிறார்கள். அனேகமான ஏனைய பூர்வீகக் குடிகள் பாரசீக மொழிகளைப் பேசுவார்களாவர். இதைவிட மதவேறுபாடுகளும் இப்பூர்வீகக் குடிமக்களைப் பிரித்து வைத்துள்ளன. ஹசாராக்களும் இன்னும் சிலரும் சீய்ட் முஸ்லீம்கள். அதேவேளை மற்றைய ஆப்கானிஸ்தான் குடிகள் சனி முஸ்லீம்கள். சீய்ட் முஸ்லீம்கள், ஆப்கானிஸ்தான் சனத்தொகையின் 25 வீதத்தை வகிக்கிறார்கள். தற்போது இங்குள்ள மத முரண்பாடுகளுக்குப் பின்னால் உந்துசக்தியாக வெளிநாட்டுச் சக்திகள் குறிப்பாக ஈரான், சவூதி அரேபியா- தொழிற்படுவதாகத் தெரிகிறது.

இப்போது இந்த இன, மத வேறுபாடுகள் எல்லாமாகச் சேர்ந்து எதிர்காலக் குழப்பங்களிற்கு வழிகோலக்கூடும். ஆப்கானிஸ்தான் யதார்த்தத்தில் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட தேசம் அல்ல. பிரிவுகளே இங்கு காணக்கூடியதும் முக்கியத்துவமுடையதுமாக இருக்கின்றன.

இன்னும் வேறு வகையான பிரிவினைகளும் ஆப்கானிஸ்தானில் காணக்கூடியதாக உள்ளன. பல கொரில்லாக் குழுக்கள் சிறிய சிறிய பிரதேசங்களில் தத்தம்து கட்டுப்பாட்டைக் கொண்டனவாக உள்ளன. ஒப்பீட்டளவில் பெரிய குழுக்களாக முஜாகிதீன் போராளிகள் உள்ளனர். இவர்களைச் சேர்ந்த ஒன்பது குழுக்கள் ஈரானில் தளம் கொண்டிருந்து, ஈராளியச் செல்வாக்கின் கீழ் ஹிஸ்பி வகடாட் எனும் கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் பாகிஸ்தானில் இருந்துவந்த மற்றைய ஏழு சனி முஸ்லீம் குழுக்கள் இரண்டு வகையான முகாம்களாக பொதுவாக இனங்காணக் கூடியவாறு உள்ளார்கள். முடி அரசொன்றை மறுபடி நிறுவுவதற்கு ஆதரவான மூன்று மிதவாதக் குழுக்கள் ஒருவகையினர். இவர்கள் மேலைத்தேச சார்புள்ளவர்களாக கருதப்படுகின்றனர். மற்றைய நான்கு கடும் போக்குடைய குழுக்களும் அடிப்படைவாதிகள் என்று வர்ணிக்கப்படுகின்றனர் - அதாவது மதக்கோட்பாடுகளை தீவிரமாகக் கடைப்பிடிக்க வற்புறுத்துபவர்கள். இவ்வாறு வேறுபட்ட கண்ணோட்டங்களைக்கொண்டுள்ள, ஒன்றையொன்று எதிர்க்கின்ற குழுக்களாக பிரிவுபட்டு நிற்கும் நிலையில் ஆப்கானிஸ்தானில் ஒற்றுமையையும், அமைதியையும் ஏற்படுத்துவது என்பது மிகவும் கடினமான ஒன்றாக அமையப்போகிறது.

> பாகிஸ்தானினதும் அரபு நாடுகளினதும் மேற்கத்தைய நாடுகளினதும் ஆதரவு பெற்ற பலம் வாய்ந்த ஹில்டி இஸ்லாமி தனது முதன்மை பாத்திரத்தை பெறத் தவறியுள்ளதால் சமரசம் செய்து கொள்ள நிர்பந்திக்கப்பட்டுள்ளது


ஹெக்மத்யார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பினும் நிஜாதி மிலி எனப்படும் ஒரு மிதவாதக் குழுவைச் சார்ந்த தற்போதைய இடைக்கால அரசின் தலைவர் சிப்கௌதுல்லா மொஜா திதி அதிகளவு சண்டைப்பலம் கொண்டிருந்தவரல்ல. இவர் 50 முஜாகிதீன் உறுப்பினர்களைகொண்ட கவுன்சிலின் உதவியுடன் அரசத் தலைவராக உள்ளார். இன்னோர் மிதவாதக் குழுவான மஹாஜி மிலி யிலிருந்து உதவி அரசத் தலைவராக சயீத் அகமட் கைஸ்லானி உள்ளார். இருவருமே புனிதர்களாக கருதப் படும் மதத்தலைவர்களாவர்.

நான்கு கடும் கோட்பாடுடைய குழுக்கள் ஹில்டி இஸ்லாமியின் இரண்டு பிரிவுகளைச் சார்ந்தவை. அவற்றை முறையே குல்புதீன்-ஹெக்மத்யார் உம் யூனூஸ் காலிஸும் தலைமை தாங்குகிறார்கள். அத்துடன் அங்கு புர்ஹானுதீன் றப்பானியினால் தலைமை தாங்கப்படும் ஜாமாத்தே இஸ்லாமியி அமைப்பும் உண்டு. அப்துல் நாகூல்-சையஃப்பினால் தலைமை தாங்கப்படும் இத்தேஹி இஸ்லாமியி அமைப்பும் உண்டு ஹெக்மத்தியார், காலிஸ் அகிய இருவரும் முக்கியத்துவம் வாய்ந்த பக்தூன் மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்துகிற பட்டாணியர்கள். ஆனாலும் ஹெக்மத்தியாரின் கொரில்லாக் குழுவே பாகிஸ்தானதும், மேற்கு நாடுகளினதும், சவூதி அரேபியாவினதும் அதிகமான ஆதரவைப் பெற்று பலம் வாய்ந்த குழுவாக விளங்கியது. இருப்பினும் அது தனது முதன்மைப் பாத்திரத்தை நிலைநாட்டத் தவறி தற்போது அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் சமரசம் செய்துகொள்ள வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இவ்வேளையில் ஜமாத்தே இஸ்லாமியி கடைசிக் கால சண்டைகளின்போது மிகவும் பலம் வாய்ந்ததாகவும், வெற்றிகரமானதாகவும் உருவெடுத்தது. இதற்குக் காரணம் அதன் தனித்துவம் மிக்க இராணுவத்தலைவர், பஞ்சஷீர் பள்ளத்தாக்கின் சிங்கம் என அழைக்கப்படும் அகமட் ஷா மசூத். சண்டைகளில் முன்னிலைக்கு வந்த இன்னொரு தலைவர் தோஸ்தம் ஆவாத். இவரைப் பின்பற்றுபவர்கள்





மேலே: அகமட் ஷா மசூத் இன் ஒரு குழு நடு: இடைகால அரசின் தலைவர்: மொஜா திதி கீழே: ரஷ்ஷிய உதவியுடன் ஆப்கான் தலைவராய் இருந்த நஜி புல்லா

கட்டுரை: பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை

கொடுரங்களிற்கும், கொள்ளைகளிற்கும் பெயர் போனவர்கள்.

மொஜாதிதியின் இடைக்கால அரசாங்கத்தின் ஆட்சிக்கால முடிவின் பின் அங்கு ஒரு தேர்தல் நடக்கவுள்ளது. ஆனால் இத்தனை பல்வேறு போக்குகளைக் கொண்ட ஒன்றை ஒன்று மோதுகின்ற பிரிவுகளிற்கு மத்தியில் அமைதியான ஒரு ஜனநாயக அரசாங்கம் அமைவது என்பது, -அவ்வாறு ஒன்று தேவை என்ற ஆதங்கமும் அவசியமும் எவ்வளவு இருந்தேபாதும்- ஒரு கனவு தான்.

அகமட் ஷா மசூத் ஒரு தாஜிக் இனக்குழுவினரென்பதால் பட்டாணியர்கள் அவரை விரும்பமாட்டார்கள். தோஸ்தம் ஒரு உஸ்பேக், தலைவராக வருவதற்கு வாய்ப்பேதும் அற்றவர். ஹெக்மத்யார் ஒரு பட்டாணியர். பட்டாணியர் ஒருவரே தலைவராக வரவேண்டுமென்ற வரலாற்று ரீதியான உரிமையைக் கோர வாய்ப்புள்ளபோதும், தந்போது அரசியல் ஓட்டத்திற்கு வெளியே இருக்கிறார். எனினும் இவர்பற்றி பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

வருடக்கணக்காக நிகழ்ந்த இந்த யுத்தம் வரலாற்றால் கண்டு கொள்ளப் பட்ட ஒன்றை மீண்டும் நிரூபித்துள்ளது. ஆப்கானிஸ்தான் பிறநாட்டு அட்சியாளர்களால் ஒரு போதும் ஆளப்படமுடியாதது. இது முன்னர் பிரித்தானியர்களால் மிகுந்த விலை கொடுத்துக் கற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பாடம். அண்மையில் அது தன்னை ஒரு வியட்னாமாக, ரஷ்ஷியாவிற்கு நிரூபித்தது. தற்போது உள்ள அச்சம் என்னவென்றால் யுத்தங்களின் முடிவில் அது ஒரு அடிப்படைவாத நாடாக மாறிவிடலாம். இவ்வாறான எல்லாவித சாத்தியப்பாடுகளிற்கும் மத்தியில் ஆகப்கானிஸ்தானின் எதிர்காலம் அவதானமாகப் பார்க்கப்படவேண்டிய ஒன்று. எப்படியிருப்பினும் மிகவும் அத்தியாவசியமான தேவையாக இருந்துவந்த புனருத்தாரண வேலைகளும், திருத்த வேலைகளும் இனி அங்க உடனடியாக மேற்கொள்ளப்படும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு மேதையின் ஆளுமை

'சினிமா கோட்பாடு' என்ற திரைப்படக்கலை சம்பந்தமான ஆய்வு நூலின் முதலாவது வரியிலேயே அதன் ஆசிரியரான பேல பெலாஸ் பின்வருமாறு கூறுகிறார்.

"இந்த உலகின் பேறு எந்தக்கலையைக் காட்டிலும் சினிமாக்கலையானது மக்களின் மனதை ஆழமாகப் பாதிக்கக் கூடியது என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று.

இந்த கருத்தின் உண்மையை கடந்துசென்ற கால கட்டத்திலே ஒத்துக் கொள்ளக் கூடியதான பல நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பிரம்மாண்டமான ஒரு தொழிலாக அது வளர்ந்திருப்பதோடு மட்டுமன்றி, மக்களின் வாழ்க்கையோடு பிணைக்கப்பட்டு விட்ட ஒரு அம்சமாக, அவர்களின் சிந்தனைப் போக்குகளையே மாற்றி அமைக்கும் ஒரு சாதனமாக விளங்குவதை நாம் காண்கிறோம்.

"ஆனால் இந்த திரைப்படங்களில், பொதுவாக மக்கள் விரும்பிப்பார்க்கும் படங்களுக்கும், விமர்சகர்கள் வியந்து பாராட்டுகின்ற படங்களுக்கும் இடையே ஏன் இவ்வளவு வித்தியாசம்? இது சினிமாவுக்கு மட்டுமே உள்ள ஒரு பிரச்சினையா அல்லது எல்லாக் கலைகளுக்குமே இயற்கையாய் இருக்கக்கூடிய ஒரு பிரச்சனையா?" இவ்வாறாக கேள்விகளை எழுப்பும் சென்னை திரைப்படகழக தலைவர் கே. ஹரிபாரன்-

"ஆம்! இந்தப் பிரச்சினை எல்லாக்கலைகளிலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சினிமாவில் இது சற்று அதிகமாகவே வெளிப்படுகிறது" என்று கூறி முடிக்கிறார்.

இசை, ஓவியம், சிற்பம் ஆகிய எந்த கலைவெளிப்பாடுகளை கருத்தில் கொண்டாலும் இந்த ரசனைவேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் மேற்கூறியவாறு திரைப்படக்கலையில் இந்த வேறுபாடு, வெளிப்படையாக தெரியும் அளவிற்கு அமைந்துள்ளது.

பெருமளவிலான மக்களை சென்றடைவதன் மூலம்தான் ஒரு படைப்பு வெற்றியடைகிறதா? அல்லது குறிப்பிட்ட அளவினரான, புத்திஜீவிகள் என அழைக்கப்படுபவர்களின் அங்கீகாரத்தைப் பெறுவதனால் வெற்றியடைகிறதா?



ரே

திரைப்படங்கள் ஒரு தொழில் எனப்பார்க்கும்போது, அவை வருவாயைத் தேடித் தருவனவாக அமைய வேண்டும் என்பதில் யாரும் வேறுபட்ட கருத்தைக் கொண்டிருக்க முடியாது. எனவே அது பெருமளவு மக்களைச் சென்றடைய வேண்டும். உலகிலேயே அதிகமான, ஏறக்குறைய வருடத்திற்கு 900 திரைப்படங்களை தயாரிக்கும் நாடாக விளங்கும் இந்தியாவிலே, 22 மாநிலங்களிலே, ஏறக்குறைய 20 மொழிகளிலே திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. சினிமாத்துறை வருவாயைக் கோரும் தொழிலாக இங்கு விளங்குகின்றது. இந்தப் பின்னணியிலே, தனது தனித்துவமான அணுகுமுறையுடன் சத்யஜித்ரே சினிமாத்துறையில் காலடி எடுத்து வைத்த பொழுது எதிர்நோக்கியிருக்க கூடிய எதிர்ப்புகளையும் ஏளனங்களையும் நாம் உணரக் கூடியவர்களாக இருப்பின் அவரது சாதனை மகத்தானது என்பதை மறுதலிக்க மாட்டோம்.

சினிமாத்துறையின் புதிய பரிணாமத்தை, காணமுயன்ற பிரான்ஸ் நாட்டு புதிய சுய இயக்கத்தினர் உருவாகுவதற்கு காரணமாக இருந்ததாகக் கூறப்படும் சினிமாத்துறை சார்ந்த சஞ்சிகையான "திரைப்பட ஏடுகள்" - (Cahiers du Cinema). 'படைப்பாளிகள் கோட்பாடு' உருவாகுவதற்கும் ஆதாரமாக அமைந்தது.

"ஒரு திரைப்படத்தை யார் தயாரித்தாலும், அதன் கதையின் மூலம் எதுவாக இருந்தாலும், அதில் பங்கேற்ற பல்துறை வல்லுனர்களின் பங்கு என்னவாக இருந்தாலும், சில இயக்குனர்கள் மட்டுமே படைப்பாளிகள் என்று அழைக்கப்படுவதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். ஏனெனில் இவர்களுடைய விருப்பு - வெறுப்புகள், உலகத்தைப்பற்றி இவர்களுக்கு இருக்கும் நோக்கு, திரைப்படத்தை இவர்கள் அமைக்கும் பாணி என்ற அம்சங்களில் ஒரு தனித்தன்மை இவர்களுடைய எல்லாப்படங்களிலும் தென்படுகிறது என்பது தான் இந்தக் கோட்பாட்டின் அடிப்படை"

(புதிய அலை இயக்கம் - வெ. ஸ்ரீராம்)

இந்த புதிய அலை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான பிரான்சிய இயக்குனர் ழான் றென்வார் (Jean Renoir) என்பவரோடு சத்யஜித்ரே ஏற்படுத்திக் கொண்ட தொடர்பும் ரேயின் சினிமாத்துறை சம்பந்தமான புதிய சிந்தனைக்கு வித்திட்டதென்று கூறுவார்கள். எனவே ரேயும் முற்குறித்த 'படைப்பாளிகள் கோட்பாட்டிற்கு'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இசை, சிறுகதை, ஓவியம் போன்ற பல கலை வெளிப்பாடுகளின் மத்தியில் பிறந்து, வளர்ந்து, தாகூரின் சாந்திநிகேதனில் பெற்ற கல்வியும், பிரயாண அனுபவங் களும், விட்டோரியா டி சிகா (Vittoria de Sia) போன்றோரின் பாதிப்பும் சத்யஜித் ரேயை சினிமா 'படைப்பாளி' யாக்கின.



எந்தவித முன் அனுபவமும் இன்றி, நிதி நெருக்கடியின் மத்தியில் ரே உருவாக்கிய 'பதர்பஞ்சலி' (Pather Panchali) வங்காள, இந்திய எல்லைகளைக் கடந்து, சர்வதேச அரங்கின் உன்னத திரைப்படங்களில் ஒன்றென கணிப்பினைப் பெற்றது. நகர்ப்புற வாழ்வின் அவலங்கள் ஏக்கங்கள் இதன் கருப்பொருள். கதை நாயகன் சிறுவன் அபூவின் சகோதரி துர்கா இறுதியில் இறப்பதோடு திரைப்படமும் நிறைவெய்துகிறது.

உட்பட்டவராகவே விளங்குகிறார்.

ரே, தான் ஒரு திரைப்படப்படைப்பாளியாக வேண்டுமென்ற உந்துதலை பெறுவதற்கு விட்டோரியோ டி சிகாவின் (Vittorio De Sica) 'பைசிக்கிள் திருடர்கள்' என்ற இத்தாலியத் திரைப்படத்தை பார்க்க நேர்ந்ததும் ஒரு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

"தொழில்ரீதியல்லாத நடிகர்கள், குறைந்த வசதிகள், வெளிப்புறப்படப்பிடிப்புகள்" என்பனவற்றில் டி சிகாவைப் பின்பற்றிய ரே, கூர்மையான அவதானத்துடன் நுண்மையான விபரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததோடு மனித உறவுகளின் நேயத்தை, இந்தியப் பின்னணியில் சித்தரிக்க முற்பட்டார்.

திரைப்பட இயக்குனர் தாபன் சின்ஹா (Tapan-Sinha) - ரேயின் படைப்புக்கள் பற்றி இவ்வாறு கூறுகிறார். "இந்திய கதைக்கருக்களில், பாத்திரங்களில், நிலைப்பாடுகளில் ஒரு புதிய உயிரை ஊட்டும் முகமாக மேற்கத்தைய அம்சங்களில், தன்னை பாதித்தவற்றை ரே பயன்படுத்தினார். தனது பரந்துபட்ட அறிவினாலும், பிரயாண அனுபவங்களினாலும் இந்தியாவை ஒரு நிதர்சனக் கண்ணோட்டத்துடன் பார்ப்பது ரே ற்கு சாத்தியமாகியது. அவர் இந்திய சினிமாவை சர்வதேச அரங்கிற்கு இட்டுச் சென்றார்".

ரே இந்தியாவின் ஏழ்மையை மேற்கத்தைய நாடுகளுக்கு விலைப் பொருளாக்கினார் என்ற குற்றச் சாட்டை, சன்ஹா வன்மையாக மறுக்கிறார்.

1950களில் இந்தியாவின் புகழ்பெற்ற நடிகைகளுள் ஒருவராக விளங்கிய "மதர் இந்தியா" புகழ் நர்கீஸ் டட், தனது பேட்டியொன்றில், இந்த குற்றச்சாட்டை முன்னிறுத்தி சத்யஜித்ரேயை கடுமையாகச் சாடினார்"பதர் பஞ்சலி" போன்ற படங்கள் வெளிநாடுகளில் ஏன் புகழ்பெற்றன? அங்கு வாழ்பவர்கள் இந்தியாவை பரிதாபகரமான நிலையில் பார்ப்பதற்கு ஆசைப்படுகிறார்கள் அதனால்தான்! இந்தியாவைப்பற்றிய அவர்களது எண்ணமும் அதுதான். எனவே அவ்வாறு வறுமை இந்தியாவைச் சித்தரிக்கும் படங்கள் அவர்களுக்கு யதார்த்தப் படங்களாகத் தெரிவதில் வியப்பேதுமில்லை. "ரே போன்றவர்கள் விருதுகள் பெறுவதற்குத்தான் இத்தகைய படங்களைத் தயாரிக்கிறார்கள்" என்று முத்தாய்ப்பு வைத்தார் நடிகை நர்கீஸ் டட்.

ஆனால் நர்கீஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் பம்பாய் சினிமாவுலகின் தரம் பற்றி கூறாமல் இருப்பதே சாலச்சிறந்தது என்பது பொதுவான அபிப்பிராயம். ரேயின் திரைப்படங்கள், தன்னை எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துப் போராடும் மனிதர்களின் சிறப்பினை சித்தரிப்பதாகவே அமைந்துள்ளன என்கிறார் தாபன் சின்ஹா.

'ராஷோமன்', செவன் சமுராய்' போன்ற அற்புத திரைப்படங்களை படைத்து சர்வதேசப் புகழ் பெற்ற ஜப்பானிய திரைப்பட இயக்குனரான அகிரா குரோசாவா (Akira Kurosawa) 'பதர் பஞ்சலி' பற்றி கூறும் போது 'பதர் பஞ்சலி' திரைப்படத்தை நான் பார்த்தவுடன் என் மனதில் எழுந்த துடிப்பினை வர்ணிக்க முடியாது. மீண்டும் மீண்டும் இந்தத் திரைப்படத்தை நான் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தபொழுது உணர்வினால் நான் மூழ்கடிக்கப் பட்டேன். அமைதியாக ஓடும் ஆற்றின் நிச்சலனமும், உயர்வும் - இந் தத்திரைப்படத்தின் ஓட்டத்திற்கு நிகரானவை" என்று கூறுகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரேயின் முன்னோர்களில் அரச நிர்வாகிகள், நிலச்சுவான் தார்கள், பண்டிதர்கள், கல்விமான்கள், மந்திரவாதிகள் ஆகியோருடன் வங்காள கிரிக்கெட்டின் தந்தை என அழைக்கப்பட்ட ஒரு விளையாட்டு வீரரும் அடங்குவர்.

பாட்டனார் ஒரு அச்சக உரிமையாளர் - குழந்தைகளுக்கான நூல்கள் எழுதியவர். தந்தை சுகுமார் ரே, ரவீந்திர நாத் தாகூரின் கணிப்பினைப் பெற்ற ஒரு சிறந்த எழுத்தாளர்.

'மனிக்' (Manik) என்று சிறுவயதில் அழைக்கப்பட்ட ரே கவிதைகள், இசைப்பாடல்கள், கதைகள், சித்திரங்கள் போன்றவற்றின் மத்தியில் தன் இளமைப்பருவத்தை கழித்தார்.

சாந்திகிகேதனில் ரே பெற்ற கல்வி, ஓவியத்துறையில் நாட்டத்தையும், இயற்கையை நேசிக்கும் தன்மையையும் இந்திய இசையில் ஆழ்ந்த பற்றினையும் பெறச் செய்தது. இவ்வாறாக அவர் வாழ்ந்த சூழ்நிலையும், பெற்ற கல்வியும், தொடர்ந்து மேற்கத்தைய நாட்டு படைப்பாளிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளும் ரேயை ஒரு 'படைப்பாளி'யாக்குவதில் தமது பங்களிப்புகளை செய்து கொண்டன.

பிபுதி பூஷன் பனர்ஜி (Bibhuti Bhushan Banerji) என்பவரின் நீண்ட ஒரு நாவலின் ஒரு பகுதிதான் பதர்பஞ்சலி (பாதையின் கதை). அபு (Abu) என்ற பாத்திரத்தின் பிறப்பு, குழந்தைப்பருவம், இளமைப்பருவம், வாலிபம், திருமணம், தந்தைநிலை இவ்வாறாக மனிதனின் வாழ்வின் பலநிலைகளை உணர்வு பூர்வமாக சித்தரிப்பதாக அமைந்தவைதான் பதர் பஞ்சலியும் அதன் தொடராக வெளிவந்த அபராஜிதோ (Aparajitho). அபூர் சன்சார் (Apur Sansar) ஆகிய திரைப் படங்களும்.

1955ல் 'பதர்பஞ்சலி'யின் தோற்றத்துடன் இந்திய திரைப் படத்துறையில் ஒரு புதியஅலை உருவாகியது. வங்காளத்தின் புறநகர்ப்பகுதிகளில் வாழும் மக்களின் கதையாக, வங்காள மக்களுக்காக எடுக்கப்பட்ட ஒரு திரைப்படம், சர்வதேச திரைப்பட உலகின் உன்னத திரைப்படங்களில் ஒன்றென கணிக்கப்பட்டது.

'பதர்பஞ்சலி'யை உருவாக்கும்பொழுது ரே எதிர் நோக்கிய நிதி நெருக்கடி - அதை அவர் தீர்த்துக் கொண்ட வழிகள் ஒருபுறம் இருக்க, அந்த திரைப்படத்தின் முழுமை பெறாத படச்சுருள்கள் சிலவற்றைப் பார்க்க நேர்ந்த, ஹொலிவுட்டின் பிரபல இயக்குனரான ஜோன் ஹுஸ்டன் John Huston வாயடைத்துப் போய் நின்றது - ரேயின் துன்பங்கள் பிரச்சினைகள் எல்லாவற்றையும் மறக்கச் செய்ததாம்!

பதர்பஞ்சலி, அபராஜிதோ, அபூர்சன்சார் ஆகிய திரைப் படங்களோடு ரேயின் பறாஸ் பதர் (Paras Pather), ஜல் சாகர் (Jalsaghar), தீன்கன்யா (Teenkanya), மகாநகர் (Mahanagar), சாருலதா (Charulatha) போன்ற திரைப்படங்களும் அவருக்கு சர்வதேசரீதியில் கணிப்பினையும் விருதுகளையும் பெற்றுத்தந்தன. சினிமாத்துறையின் ஒரு சுயமான, நேர்மையான வாரிசாக உருவாகிய சத்யஜித் ரே, எந்தவித முன் அனுபவமோ, பயிற்சியோ இன்றி, சொல்லப்படும் பொருளுக்கும், திரைப்படத்தின் அமைப்புக்குமிடையே ஒரு ஒற்றுமையைப் பேணியதோடு மட்டுமல்லாமல், எதைச் சொல்லவேண்டும், அதை எவ்வாறு சொல்லவேண்டும் என்பதிலும் திடமாக நின்றார்.



சிறுவன் அபூ வளர்கிறான் தாய்-மகன் பாசப்பிணைப்பு சோதனைக்குள்ளாகிறது. பதர்பஞ்சலியின் தொடரான அபராதோ (Aparajito) கூறும் கதை இது 1957ல் வெனிஸ் திரைப்பட விழாவிலும் 1958ல் சான்பிரான்சிஸ்கோ திரைப்பட விழாவிலும் விருதுகள் பல பெற்ற திரைப்படம் இது.



'அபூர் சன்சார்' (Apur sansar) திரைப்படத்தில் அபூவின் கதை-திருமணம், தந்தையாதல் ஆகிய வாழ்க்கைப்படிகளை தாண்டிச் சென்று முடிவடைகிறது. பிபுதி பூஷனின் நாவல் ரேயின் கைவண்ணத்தில் இம்மூன்று திரைக்காவியங்களாகின. 1960ல் சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான விருதினை 'அபூர் சன்சார்' அமெரிக்காவில் பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படப்பிடிப்பு, ஒளியமைப்பு, கதைக்கரு எல்லாவற்றிலுமே மிகையற்ற 'ஜல்சாகர்' (Jalsaghar) திரைப்படத்தின் நாயகன்-நிலச்சுவாந்தார் பரம்பரையின் ஒரு வாரிசு - சிதைந்து போகும் தன் வாழ்வின் மாற்றங்களை துணிவுடன் எதிர்கொள்கிறான். இறுதியிலும் மனத்தளவில் அவன் மகா புருடனே! வங்காள நட்சத்திரம் சாபி பிஸ்வாஸ் (Chnabi Biswas) உயிரூட்டிய பாத்திரம் இது!



1961 - தாகூரின் நூற்றாண்டு வருடம். அரச திரைப்படப் பிரிவின் சார்பில் தன் குருதேவரின் வாழ்க்கை வரலாற்றை விவரணச்சித்திரமாக படைத்தார், சத்யஜித்ரே அத்தோடு சர்வதேசரீதியில் சிறந்த விவரணச்சித்திரத்துக்கான விருதினையும் இதன் மூலம் வென்றெடுத்தார் தாகூரின் மூன்று சிறுகதைகளை 'தீன் கன்யா' (Teen Kanya) எனும் தலைப்பில் கலைச்சிறப்பின் உச்சமென பாராட்டும் வகையில் ரே படைத்தார்.

தனது சுயமான அறிவினாலும், உணரும் தன்மையினாலும், திரைப்படத்துறையின் பல அம்சங்களிலும் தனது ஆளுமையை அவர் நிறுவினார். இந்தியாவின் புதியஅலை இயக்குனர்களின் ஒருவரான ஷியாம் பெனகல் (Shyam Benegal) பின்வருமாறு கூறுகிறார்.

'திரைப்படத்துறையின் ஒவ்வொரு அம்சத்திலும் - திரைப்படப்பிரதி, ஒலிச்சேர்ப்பு, பின்னணி இசை, கையாளும் கருப்பொருள், தனது நடிகர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட நடிப்புத்திறன் ஆகிய அத்தனை அம்சங்களிலும் அவரது பங்களிப்பு மகத்தானது'

தனது ஆரம்பகாலத் திரைப்படங்களிலே ரவிசங்கர், அலி அக்பர் கான் போன்ற இசை மேதைகளின் இசை அமைப்பினை இணைத்துக் கொண்ட ரே, 'தீன்கன்யா' திரைப்படத்துடன் தானே இசையமைப்பாளர் ஆனார்.

"திரைக்கதையை, அது உருவாகப் போகும் முறையை, அதற்கான இசையின் தன்மையைக் கூட முன்கூட்டியே திட்டமிடும் ரேற்கு இந்த இசைமேதைகளின் பங்களிப்பு வேறுபட்டதாக, தோன்றியதினால் அவர்களை விட்டு விலகி தானே இசையமைக்கத் தொடங்கினார் என்று" "சத்யஜித் ரேயின் சினிமா" என்ற தனது நூலில் சித்தானந்த தாஸ் குப்தா குறிப்பிடுகிறார்.

பொருத்தமான பாத்திரங்களுக்கு, பொருத்தமான நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதில் ரேயின் திறன் வியந்து பாராட்டற்குரியது. சாதாரணமாக நடிகர்களின் தோற்றம், குணாதிசயம் ஆகியவற்றையும் அவர் நடிகர் தேர்வில் கருத்தில் கொண்டு, முடிவெடுத்திருக்கிறார்.



இசையமைப்பில் ரே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரேற்கு இறுதி அஞ்சலி



சத்ஜித் ரே தாகூரின் நாவல் ஒன்றை 1964ம் ஆண்டில் படமாக்கினார் 'நஸ்ரா நீட்' (Nasta need - சிதைந்த கூடு) என்ற இந்த நாவலின் திரைவடிவம் தான் 'சாரு லதா' (Charulata) ரேயின் உன்னத நிலையின் சிகரத்தை எட்டியதாக இது கருதப் படுகிறது அவரே இதை ஒத்துக் கொண்டிருக்கிறார். திரைச் சுருள்களில் எழுதப் பட்ட கவிதை 'சாருலதா'!

இவ்வாறாக சினிமா என்பது ஒரு இயக்குனரின் ஊடகம் என்ற கருத்திற்கிணங்க, ரேயின் ஆளுமை, முழுமையான கண்ணோட்டத்துடன் அவரது திரைப்படங்களை அணுகும் போது புலனாகும்.

'தாகூர்', 'பாலசரஸ்வதி' போன்ற கலைஞர்கள், மேதைகள் பற்றி பல விவரணச் சித்திரங்களை ரே படைத்திருக்கும் அதே வேளையில் அவரைப்பற்றி, அவரது படைப்புகள் பற்றி 11 விவரணத்திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சார்லி சாப்ளின், அகிரா குரோசாவா போன்ற திரையுலகின் மேதைகள் எனப்படுபவர்கள் பெற்ற - ஒஸ்கார் சிறப்பு விருதினை சுகவீனமுற்று, மருத்துவமனையில் இருந்த வேளையில் சத்யஜித்ரே பெற்றார்.

வங்காளம் ரவீந்திரநாத் தாகூரை உலகிற்கு அளித்ததினால் எவ்வளவு பெருமையைப் பெற்றதோ - அதற்கு சற்றும் குறைவானதல்ல, சத்யஜித்ரே சம்பாதித்துக் கொடுத்த பெருமை. சாதாரண மனிதர்களின் வாழ்க்கைச் சிக்கல்களை, இன்ப துன்பங்களை திரைக் காவியங்களாகப் படைத்து - பெனகல் கூறுவது போல "வழக்கமான இந்தியப் பட நாயகர்களின் தன்மைக்கு முற்றுப்புள்ளி வைத்த" சத்யஜித்ரே சென்ற ஏப்ரல் மாதம் 23ந் திகதி தனது கண்களை நிரந்தரமாக மூடியபொழுது, திரைப்பட உலகம் ஒரு மாபெரும் படைப்பாளியை இழந்தது.



'பாதையின் கதை' யில் (Pather Panchali) தொடங்கிய கலைப்பயணம், 36 ஆண்டுகளின் பின்னர் 'அன்னியனா'க (Agantuk) முடிவு பெற்றது, தற்செயலானதா? தான் நேசித்த கலையின் விழுமியங்கள் சிதைவுறுவதைக் கண்டு, இந்த மேதை 'அந்நியமாகி' விட்டதை இது கூறுகிறதா?

கே. எஸ். பாலச்சந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net













# "ஒலிம்பிக்........"

மீண்டும் ஒரு ஒலிம்பிக் ஆண்டு வந்திருக்கிறது. 1988ல் கொரியா வின் சியோல் நகரில் நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டிகளின் இறுதிநாளன்று அணைக்கப்பட்ட ஒலிம்பிக் தீபம், இம்மாதம் ஸ்பெ யின் நாட்டின், பார்சிலோனா நகரில் ஏற்றப்படப் போகிறது.

தங்க, வெள்ளி, வெண்கலப்பதக் கங்களை வென்றெடுத்து, பிறந்த நாடுகளுக்கும், தமக்கும் பெரு மை தேட, உலகின் பலபாகங் களிலிருந்தும் வீரர்களும், வீராங் கனைகளும் பார்சிலோனா நோக்கி பயணமாகத் தொடங்கி விட்டார்கள்.

கிரேக்க நாட்டிலே நடாத்தப் பட்ட ஆதிகால ஒலிம்பிக் போட் டிகளில் தங்க, வெள்ளி, வெண் கலப்பரிசுகள் வழங்கப்பட வில்லை. ஒலிவ் இலைகளி னாலும், கிளைகளினாலும் உரு வாக்கப்பட்ட கிரீடங்கள் தான் வென்றவர்களின் தலைகளை அலங்கரித்தன.

ஆனால் காலப் போக்கில் இந்த 'ஒலிவ்கிரீட' சங்கதி வீரர்களுக்கு திருப்தியளிக்காமல் போக அவர் களின் முணு, முணுப்பு, கிரேக்க நாட்டை தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்த ரோமச் சக்கர வர்த்தி முதலாம் தியோடோசி யஸ் காதில் விழுந்தது. விளைவு – கி. பி. 394ல் ஆதிகால ஒலிம் பிக் போட்டிகளுக்கு மன்னன் முற்றுப்புள்ளி வைத்தான்.

பெண் உரிமைவாதிகளின் கவ னத்திற்கு ஒரு விடயம் இந்த ஆதிகால ஒலிம்பிக் போட்டிக ளில் பெண்கள் பங்குபற்ற அனு மதிக்கப்படாதது மட்டுமல்ல, பார்வையாளர்களாகவும் அரங் கில் நுழைய விடப்படவில்லை யாம்! வலுவான காரணம் ஒன்று இருந்திருக்கிறது. போட்டி களில் பங்குபற்றிய வீரர்கள், தங்கள் 'பிறந்தநாள்' ஆடையுடன் தான் களத்தில் இறங்கியிருக்கி றார்கள்.!

1502 ஆண்டுகளாக மறக்கப் பட்டிருந்த ஒலிம்பிக் போட்டி களுக்கு, 1896ல் மீண்டும் 'பச் சைக் கொடி' காட்டியவர் பிரா ன்ஸ் நாட்டவரான பியரி டி கொபட்டின் (Baron Pierric de Coubertin) என்பவர். உலக அமைதிக்கும் சமாதான சக வாழ்விற்கும் தூண்டுகோலாக ஒலிம்பிக் போட்டிகள் அமைய வேண்டும் என இந்த 'நவீன ஒலிம்பிக் போட்டிகளின் தந்தை' ஆசைப்பட்டிருக்கிறார்.

ஆனால் இவரது ஆசை பலித் திருக்கிறதா என்று பார்த்தால்.... சந்தேகம் தான். எந்தத்துறையை யும் விட்டுவைக்காத அரசியல் விளையாட்டுத் துறையை மட்டும் விட்டு வைக்குமா?

1936ல் ஹிட்லர் இந்த 'கைங்கர் யத்தை' ஆரம்பித்து வைத்தார் ஜெர்மனியில், பெர்லின் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 'ஆரியர்களே உன்னதமான இன த்தவர்கள்' என்ற தனது சித்தாந் தத்தை நிறுவ முற்பட்ட ஹிட்லர் 'மூக்குடை'பட்டார். ஹிட்லர், ஆரி யரல்லாத, அமெரிக்க நீக்ரோ வீரரான ஜெசி ஓவன்ஸ் (Jesse Owens) ஒன்றன் பின் ஒன்றாக 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம், நீளப்பாய்தல், 4X100 மீட் டர் தொடர் ஓட்டம் ஆகியவற் றில் தங்கப்பதக்கங்களை வென்ற தை, தாங்கிக் கொள்ள முடியா மல் அரங்கை விட்டு வெளிநடப் புச் செய்தார். பரிசளிப்பு வைப வத்திலும் கலந்து கொள்ள வில்லையாம்! இவ்வாறாக, அர சியல் சாயம் பூசப்படத் தொட ங்கியதன் பின்னர், மிக மோச மான அரசியல் சார்ந்த சம் பவம் நிகழ்ந்ததும் ஜெர்மனியில் தான். ஆனால் இது நிகழ்ந்தது. 1972ல்.

மூனிச் நகரில், ஒலிம்பிக் போட் டிகள் ஆரம்பித்த வேளையில், வீரர்கள் தங்கும் ஒலிம்பிக் கிரா மத்தில் ஆயுதபாணிகளான பால ஸ்தீனக் கொரில்லாக்கள் தங்கள் கைவரிசையை காட்டினார்கள் செப்ரெம்பர் 5ந் திகதியன்று, இவர்கள் இஸ்ரேலிய விளையா ட்டு வீரர்கள் தங்கியிருந்த இடத் துக்குச் சென்று, இருவரை உட னேயே சுட்டு வீழ்த்திவிட்டு, மிகுதி ஒன்பது பேரை பணய க்கைதிகளாக்கிக் கொண்டார்கள். 'சோகநாடகம்' தொடர்ந்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கு ஜெர்மன் பொலிசாருக்கும். கெரில்லாக்களுக்கும் இடையில் தொடர்ந்த சண்டையில் ஒன்பது பணயக்கைதிகளும் கொல்லப்பட்டார்கள் முடிவாக 11 இஸ்ரேலிய வீரர்கள், 5 கெரில்லாக்கள், ஒரு ஜெர்மன் பொலிஸ்காரர் ஆகியோரின் மரணத்துடன் இந்த 'நாடகம்' முடிவடைந்தது. ஒலிம்பிக் போட்டிகளை இடையில் நிறுத்தும் யோசனை கூட முன்வைக்கப்பட்டது ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆனால் அரசியல் சிக்கல்கள் 'ஒலிம்பிக்'கில் தொடர்ந்தன. 1976ல் கனடாவில், மொன்ட்றீல் நகரில் நடைபெற்ற போட்டிகளை தாய்வானும், 24 ஆபிரிக்க நாடுகளும் அரசியல் காரணங்களுக்காக பகிஷ்கரித்தன.

அடுத்த ஒலிம்பிக்கில் 1980 மொஸ்கோவில் நடந்த போட்டிகளில், 'ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் தலையீட்டை' காரணமாக வைத்து அமெரிக்காவும், அதன் சார்பான 35 நாடுகளும் கலந்து கொள்ளாமல் விட்டன.

1984 ஒலிம்பிக் வந்தது இம்முறை அமெரிக்காவில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில். பிறகென்ன சோவியத் யூனியனுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் தான். தனது சார்பு நாடுகளுடன் பகிஸ்கரிப்பில் கலந்து கொண்டு பழியைத் தீர்த்துக் கொண்டது.

'சியோல்' 1988 ஒலிம்பிக் போட்டிகள் ஒருவாறாக தப்பிப்பிழைத்து நடந்து முடிய, இம்முறை 'பார்சிலோனா ஒலிம்பிக்'கில் தென்னாபிரிக்காவின் மறுபிரவேசம் முக்கிய விடயமாக விளங்குகிறது 'நிற ஒதுக்கல் கொள்கை' காரணமாக பலவருடகாலமாக, அனுமதி மறுக்கப்பட்ட தென்னாபிரிக்காவின் 'ஒலிம்பிக் பிரவேசம், பொய்படோங் (Boip-atong) நகரப் படுகொலைச் சம்பவத்தினால் பின்னடைய நேர்ந்தும், மண்டேலாவின் 'ஆபிரிக்க காங்கிரஸ்' மனமிரங்கி தற்போது 'அனுமதி' அளித்ததினால், தென்னாபிரிக்க விளையாட்டு வீரர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவதாக வரும் செய்திகளும், அரசியல் கலப்பின் அறுவடைகளே! இந் நிலை தொடரத்தான் செய்யும்.

- கே. எஸ். பி -

# வடக்கையும் கிழக்கையும் பிரிக்கின்ற ஏபெக்ஸ் கவுன்சில்

வடக்கு வேறு கிழக்கு வேறாக இரண்டு சபை, இரண்டு அமைச்சரவை, இரண்டு முதலமைச்சர்கள், இவை இரண்டையும் இணைக்கின்ற ஒரு ஏபெக்ஸ் கவுன்சில். கடந்த ஜுன் 17ம் திகதி கூடிய பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டத்தில் அதன் செயலகம் முன்வைத்ததாக மங்கல முனசிங்கா (தலைவர்) கொடுத்த இனப் பிரச்சனையின் தீர்வுக்கான ஒரு ஆலோசனை இது. வடக்கிற்கான முழு நிர்வாகமும் வடக்குக் கவுன்சிலுக்கும் கிழக்குக்கான முழு நிர்வாகமும் கிழக்குக் கவுன்சிலுக்குமென்று வடக்கையும் கிழக்கையும் நிர்வாகரீதியாகப் பிரித்துவிட்டு எந்த நிர்வாக அதிகாரமுமற்ற ஏபெக்ஸ் கவுன்சில் என்ற ஒன்றை வெறும் கண்துடைப்புக்காக இரண்டையும் தொடர்புபடுத்தும் உறுப்பாக முன் வைப்பது என்பது வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்ற எண்ணக்கிடையை வேறு மொழியில் சொல்வதாகும். இதனை அமைச்சர் தொண்டமான் உட்பட தமிழ்க் கட்சிகள் யாவும் தீர்வைப்பற்றி விவாதிக்க ஒரு அடிப்படையாகக் கொள்ள முடியாதென நிராகரித்து விட்டனர்.

தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனைகட்கான தீர்வு என்ற விடயத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு தோன்றிய தன் பின்னால் தமிழ்க்கட்சிகள் தரப்பில் சில புதிய நகர்வுகள் தென்படத் தொடங்கியுள்ளன. முதலில் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கக்கூடாது என்ற கருத்தினடிப்படையில் ஒன்றுபட்டு தெரிவுக்குழுவை ஒருமித்த முகமாக எதிர்கொள்வது என்ற இணக்கத்தை எய்தினர். இதில் ரீ. யு. எல். எஃப், புளொட் (டீ. பி. எல். எஃப்), டெலோ, ஈ. பி. ஆர். எல். எஃப், தமிழ் காங்கிரஸ், ஈரோஸ், (ஈ. டீ. எஃப்), ஈ. என். டீ. எல். எஃப் ஆகிய ஏழு கட்சிகள் கூட்டுச்சேர்ந்துள்ளன.

இதன் அடுத்தபடியாக முஸ்லீம் காங்கிரசுடன், ஒரு பொது இணக்கத்தை ஈட்டி வடக்கு கிழக்கு பிரிக்கப்படாத நிலையை உறுதிசெய்வதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடத் தொடங்கின. இப் போச்சுவார்தைகளில் இணைந்த வடக்குக் கிழக்கு மாநிலத்திற்குள் எவ்வாறு முஸ்லீம்களுக்கான தீர்வொன்றை வரையரை செய்யலாம் என்பதை ஆராயத் தொடங்கின. இதில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாகவுள்ள அம்பாறை மாவட்டத்தை அவர்



**இரண்டுசபை, இரண்டு முதலமைச்சர், இரண்டு அமைச்சரவை: தமிழ்மக்கள் பிரச்சினையின் தீர்வு......? - மங்கள முனசிங்க**

களுக்கான சுயாட்சிப் பிரதேசமாக அமைக்கலாம் என்ற ஒரு கருத்தை எட்டக் கூடிய நிலையில் இப் பேச்சு வார்த்தைகள் நிற்கின்றன. தொடர்ந்து இச் சுயாட்சிப் பிரதேசத்திற்கான அதிகாரப் பகிர்வுகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நிகழ்ந்து வருகின்றது. இதில் ஒரு உடன்பாடு காணும் பட்சத்தில் இது அடுத்த ஒரு முன்னோக்கிய காலடியாக அமையலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதே வேளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவை இடைநடுவில் எஸ். எல். எஃப். பி. பகிஷ்கரிக்க முடிவெடுத்திருந்த போது இத் தமிழ் கட்சிகள் இம் முட்டுக்கட்டையை நீக்க வேண்டி-

ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றன. அப்போது இவை இனப்பிரச்சனையின் தீர்வுக்கான அடிப்படையாக நான்கு அம்சத்திட்டம் ஒன்றை வரைந்தன. அவையாவன

1. இணைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கு ஒரு ஒன்றிணைந்த அரசியல் – நிர்வாக சுயாதிபத்தியம்.

2. இவ் ஒன்றிணைந்த அலகுக்கான அர்த்தமுள்ள சுயாட்சியை உறுதி செய்யக் கூடிய போதுமான அளவு அதிகாரப் பகிர்வு.

3. பிரிக்கப்பட முடியாத வடக்கு – கிழக்கு மாகாணம் என்ற கட்டமைப்புக்குள் முஸ்லீம் மக்களின் கலாச்சாரத் தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் ஒரு ஒழுங்கமைப்பு

4. இங்கு வாழும் சிங்கள மக்கள் நாட்டின் மற்றய பகுதிகளில் வசிக்கும் ஏனய சிறுபான்மையினர் கொண்டுள்ள அனைத்து உரிமைகளையும் அனுபவிப்பதை உத்தரவாதம் செய்யக்கூடிய ஒரு ஒழுங்கமைப்பு.

இந்நிலையில் இவர்கள் ஈட்டிக் கொண்ட இன்னுமொரு பக்கபலம் அமைச்சர் தொண்டமானின் ஆதரவு. ஜனாதிபதியுடனான சந்திப்பையிட்டு அமைச்சர் தொண்டமான் தமிழ்க் கட்சிகளுக்கு இப் பிரச்சனையில் அனைத்து தமிழ் தரப்பினரும் ஒரே குரலில் பேசக் கூடியதாக இருக்கவேண்டுமெனவும் ஒருமித்த அணுகுமுறையை எடுக்க வேண்டுமெனவும் எழுதிய கடிதத்திலிருந்து இந்தத் திருப்பம் ஆரம்பித்தது. ஜனாதிபதியை சந்திக்க முன்னர் இத் தமிழ்க் கட்சிகளுடன் நிகழ்ந்த கூட்டத்தில் கலந்தாலோசித்த அமைச்சர் தொண்டமான் இக்கட்சிகள் எடுத்துள்ள நாலம்ச நிலைப்பாட்டை தாமும் தமது கட்சி சி. டபிள்யு சி. யும் ஆதரிப்பதாக ஏற்றுக் கொண்டார்.

சி. டபிள்யு. சீ யினதும், முஸ்லீம் காங்கிரசினதும் ஆதரவை தமிழ்க் கட்சிகள் ஈட்டிக் கொள்ளும் பட்சத்தில் இவர்கள் தரப்பு வாதம் ஒரு பலமான தளத்தைப் பெறும். புறக்கணிக்க முடியாத ஒரு நியாயாதிக்கத்தை ஈட்டிக் கொள்ளும். இருப்பினும் இந்த முயற்சி இன்னும் பூரணமாக்கப்பட்டு உறுதியான உருவகத்தைப் பெறவில்லை.

இது நிற்க, இத் தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியைச் சந்தித்த வேளையில் தமது இந் நான்கம்ச நிலைப் பாட்டை தெரிவித்ததுடன், யூ. என். பி இனப் பிரச்சனையின் தீர்வுக்கான தனது முன்மொழிவை வைக்காத குறையையும் எடுத்துக் கூறினர். அதற்கு ஜனாதிபதி நான்கம்ச நிலைப் பாட்டை விவாதிப் பதற்கு தெரிவுக்குழுவே சிறந்த களமென்றும், யூ. என். பியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளதே அதன் இனப்பிரச்சனை தொடர்பான நிலைப்பாடென்றும், எனினும் ஒரு தேசிய ரீதியான பொது இணக்கம் ஒரு முடிவையிட்டு ஏற்படும் நிலையில் அதை தாம் ஏற்றுக் கொள்ளத் தயாரென்றும், அதையிட்டு வேலைசெய்யுமாறும் பதிலளித்திருந்தார். இதில் முக்கியமான விடயம் யூ. என். பி. யின் தேர்தல் விஞ்ஞாபனம் வடக்குக் கிழக்கு இணைப்பை எதிர்க்கிறது. தெரிவுக்குழு உருவாகி கட்சிகளதும் பிரஜைகளதும் முன்மொழிவுகளை அது கோரியிருந்ததன் பின்னர் முதன் முதலில் அரசாங்கத்தின் பக்கத்து நிலைப்பாடுபற்றி கோடிகாட்டிய செய்தி இதுதான். ஆனால் அந்த முதற் செய்தி தமிழ்க்கட்சிகளுக்கு இனிப்பானதாக இல்லை.

இதன் பின்னர் அடுத்த கசப்பான செய்தியாக வந்த விடயம்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயலகம் முன்வைத்த ஏபெக்ஸ் கவுன்சில் வகைமாதிரி. இதனை நிராகரித்த தமிழ் கட்சிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் தமது நாலம்ச நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொள்ளும்படி வலியுறுத்தியுள்ளன.

தமிழ்க் கட்சிகள் தமது மறுதலிப்பில் இந்த தெரிவுக்குழுவின் செயலகம் முன்வைத்துள்ள வரைவு அதில் கூறப்பட்டதற்கு மாறாக தெரிவுக்குழுவுக்கு தமிழ் கட்சிகள் கொடுத்திருந்த முன் மொழிவுகளை முற்றாகப் புறக்கணித்து இயற்றப்பட்டுள்ளது என்றும் அது தமிழ்கட்சிகள் முன்வைத்த இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்தில் ஒருங்கமைந்த அரசியல் நிர்வாக சுயாதிபத்தியம் என்ற தீர்வுக்கான ஒரு அடிப்படையை கவனத்திலெடுக்கவேயில்லை என்றும் கூறுகின்றன. ஏன் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படக்கூடாது என்பதைற்கான காரணங்களை எடுத்துக் கூறி, சிங்கள அரசியல் வட்டாரத்துள் வடக்கும் – கிழக்கும் இணைந்திருப்பது பிரிவினைக்கு வழிகோலும் என்று சிந்திக்கும் போக்கை மடைமைத்தனமானதென்றும் மாறாக அவற்றைப் பிரிப்பதற்கான எத்தனிப்புத்தான் பிரிவினையை நோக்கிய போராட்டத்திற்கு வலுவான ஆதாரத்தைக் கொடுக்குமென்றும் சுட்டிக்காட்டுகின்றன.

இதேபோல் அமைச்சர் தொண்டமானும் இந்த தெரிவுக்குழுவின் செயலகம் கொடுத்த வரைவானது பிரச்சனையைத் தீர்ப்பதற்கான மூலோபாயங்களை வகுப்பதற்கு ஏதுவாக இப்பிரச்சனை என்ன என்ற குறைந்த பட்ச விளக்கத்தையாவது அறிந்து கொள்ள அக்கறை எடுக்கவில்லை என்று குறைப்படுவதுடன் ஒருமித்த வடக்கு – கிழக்கு என்ற அலகு இப் பிரச்சனையின் தீர்வுக்கு அடிப்படையான விடயம், அதைப் பிரிக்க முற்படுவது நாட்டைப் பிரிப்பதற்கு சமன், என்று வலியுறுத்தியுள்ளார். மேலும் வடக்கு கிழக்கு இணைந்த அலகாக 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம், அதனால் இது புதியதொன்றல்ல, அத்துடன் அன்று இதை எதிர்த்து ஊர்வலம் நடத்திய அதே ஜே. ஆர் ஜெயவர்த்தனாதான் இப்போது முப்பது வருடங்களின் பின் தன் அனுபவத்தால் இத் தவறை உணர்ந்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தில், இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தை ஏற்றுக் கொள்வதுதான் பிரிவினையை தடுக்கக் கூடிய ஒரே வழி என்று முடிவு செய்தார், என்பதையும் சுட்டிக்காட்டி இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளா விட்டால் சமாதானத்திற்கான முயற்சி யென்பது ஆரம்பிக்கக் கூட முடியாததாகவே இருக்கும் என்று கூறியுள்ளார்.

இப்படியான தங்கள் அதிருப்தியை தெரிவித்து தமது நாலம்ச நிலைப்பாட்டை தீர்வுக்கான அடிப்படையாகக் கொள்ளுமாறு கூறிக் கொண்டு அதற்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் அடுத்து தமிழ் கட்சிகள் இறங்கியுள்ளன. இதற்காக அவை என். எஸ். எஸ். பி, எல். எஸ். எஸ். பி, கம்யூனிஸ்ட் கட்சி, எஸ். எல். எஃப். பி ஆகியவற்றை சந்தித்து பேசியுள்ளன. இவை எவ்வகையான பெறுபேறுகளைத் தரும், சிங்களக் கட்சிகளின் சிந்தனைப் போக்கில் ஆரோக்கியமான மாற்றத்தை எந்தளவுக்கு ஏற்படுத்தும் என்பது கேள்விக்குரிய விடயம் தான். ஏனெனில் பெரிய சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரை இவ் விடயத்தைக் கையாழுவதில்கூட தமது தேர்தல் லாபங்களை கணக்கில் கொண்டிருக்கின்றன. தாம் முன்னுக்கு வந்து தீர்வை முன்வைப்பதற்குப் பதில் மற்றவர் முதலில் முன்வைக்கட்டும் அதைப் பிழை பிடித்து நாம் தாக்குவோம் என்று கொண்டிருக்கும் மனோபாவம் ஒருவருக்குப் பயந்து மற்றவர் பின்வாங்குவதற்கே வழிகோலி வந்துள்ளது இதனால் முக்கியமான ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டும் இதுவரை தமது முன்மொழிவை முன்வைக்காத நிலையை நாம் காணக்கூடியதாக வுள்ளது. ☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பல்முனை பேட்டி
# குமார் பொன்னம்பலம்

## பேட்டியின்மையம்: இலங்கையின் இனப்பிரச்சினை



திரு குமார் பொன்னம்பலம்

தொழில் ரீதியாக சட்டத்தரணியான இவர் அரசியலில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவராவார். இவரது தந்தை அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தால் இக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. மலையக மக்களின் வாக்குரிமைப் பிரச்சனையில், செல்வநாயகம் தலைமையில் பிரிந்து சென்றோர் தமிழரசுக் கட்சியை அமைத்தனர். எனினும் 1974ல் இக் கட்சி தமிழரசுக் கட்சி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது. அது தமிழீழக் கோரிக்கையை பிரகடணம் செய்தது. தந்தையாரின் மறைவுக்குப் பின் திரு. குமார் பொன்னம்பலம் மீண்டும் இலங்கைத் தமிழ் காங்கிரசை உரிமைகோரிக் கொண்டார்.

**கேள்வி:** அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதியுடனான எட்டு தமிழ், முஸ்லீம் அரசியற் கட்சிகளின் சந்திப்பின் பெறுபேறு, உங்களைப் பொறுத்தவரை சாதகமாகவா, பாதகமாகவா அமைந்ததென்று கூறமுடியுமா?

**குமார்:** ஜனாதிபதியைச் சந்திக்க நாங்கள் நேரம் கேட்டது வேறொரு காரணத்திற்காக. அதாவது எஸ்.எல்.எஃப்.பி. தெரிவுக்குழுவிற்கு வராததை முன்னிட்டு, அரசாங்கம் பாராளுமன்றத்தில் செப்பமாக நடந்தால் எதிர்க்கட்சியினருக்கு காரியங்களை நிறைவேற்ற வசதியாகவிருக்குமென்றும், அதற்குரிய சூழ்நிலையை உருவாக்கும்படியும் கேட்பதற்காகவே. எனினும் இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட அதே வேளையில் எஸ்.எல்.எஃப்.பி. திரும்பவும் தெரிவுக்குழுவிற்கு சமூமளிப்பதாக தீர்மானித்து அறிவித்துவிட்டது. ஆகையால் நாங்கள் எதற்காக சந்திக்கவிருந்தோமோ அந்தக் காரணம் இப்போது இல்லாது போய்விட்டமையால் நான் தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் இச் சந்திப்பை நிறுத்திக்கொள்ளலாம் என அபிப்பிராயம் தெரிவித்தேன். எனினும் மற்றைய கட்சி நண்பர்கள் வேறு விஷயங்களை கதைக்க முடியும் என்று அபிப்பிராயப்பட்டாதாலும், இதேநேரத்தில் தொண்டமான் அவர்கள் எங்களோடு இணைந்து செயற்படும் ஒரு சூழ்நிலை உண்டாகியபடியாலும் நாங்கள் ஒரு சில அதிமுக்கியமான அரசியல் நிலைப்பாடுகளை இந்தக் கூட்டத்தின் போது தெரிவிப்போமென தீர்மானித்துக்கொண்டு கூட்டத்திற்குப் போனோம். அங்கே எமது பேச்சாளர் தங்கத்துரை அவர்கள் நாம் தயாரித்து வந்த எமது நிலைப்பாடுகள் அடங்கிய அறிக்கையை வாசித்தார். அதற்கு ஜனாதிபதியவர்கள் தமிழ்மக்களின் நிலைப்பாடுகள் சம்பந்தமாக இங்கே ஆராய்வது உசிதமல்ல, இவை தெரிவுக்குழுவில்தான் முன் வைக்கப்பட வேண்டியவை, ஆகையால் இவற்றை அங்கு முன் வையுங்கள், நான் எனது கட்சியினருக்கு தெரிவுக்குழுக்கூட்டங்களில் ஒத்துழைக்கும்படி சொல்கிறேன், என்று கூறினார். இவ்வாறு இது மிகவும் கேவலமாக முடிந்தது. ஆங்கிலத்தில் கூறுவதானால் humiliating experience - அதாவது அவமானத்திற்குரிய ஒரு கூட்டமாகத்தான் வந்து முடிந்தது என்று நான் கருதுகிறேன்.

நான் நினைக்கிறேன் அவருக்கு இப்படி தொண்டமான் அவர்கள் உட்பட தமிழ்க் கட்சிகள் யாவும் ஒரு பொதுவான நிலைப்பாடுகளை வகுத்து தமக்கு முன் வைக்கப் போகிறார்கள் என்ற செய்தி முன்னரே எட்டியிருக்க வேண்டும். அதை முறியடிப்பதற்குத்தான் இப்படியான செயற்பாடு. அதாவது நீங்கள் வேறு விஷயத்திற்கு வந்த நீங்கள், அதற்குத்தான் நான் தயாராக இருக்கிறேன். என்ற ரீதியில் தட்டிக் கழித்துள்ளார்.

இக்கூட்டத்தில் யாரோ புனர்வாழ்வு பற்றிக்கதைக்க அதற்கு அவர் உரிய மந்திரி இப்போது இல்லை என்று தட்டிக்கழித்துவிட்டார்.

**கேள்வி:** விடுதலைப் புலிகளோடு யுத்தத்திற்கு போகும்போது, மற்றைய தமிழ்க் கட்சிகளை அரவணைத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு இக்கூட்டம் நடந்ததாகக் கருத இடமில்லையா?

**குமார்:** அப்படியானதாக இது அமையவில்லை. எங்களை உதாசீனப்படுத்துவது போல்தான் அமைந்துள்ளது. மேலும் அப்படியான நோக்கம் அவருக்கு இருந்திருந்தால் அவரே கூட்டியிருக்கவேண்டும். இக்கூட்டம் அவர் கேட்டு நாங்கள் போன கூட்டமல்ல. மாறாக நாங்கள்தான் கேட்டு இக்கூட்டத்தை ஒழுங்குபடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது சாத்தியமில்லை. கைப்பற்றுவதானால் அது எப்போதோ நிகழ்ந்திருக்கும்.**

**தீர்வு தனிநாடல்ல. ஐக்கிய இலங்கைக்குள் எமது காரியங்களை நாமே பார்த்துக் கொள்ள கூடிய வகையில் அமைய வேண்டும். வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநிலத்துக்குள்ளேதான் எங்கள் தீர்வுகள் அமைய வேண்டும்.**

த்திமிருந்தோம். மேலும் இக்கூட்டம் 15 நிமிடம் கூட நீடிக்கவில்லை. விரைவில் அவர் முடித்துக் கொண்டார்.

**கேள்வி:** இன்று நிலவுகின்ற சூழ்நிலையில் இல்ங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சனையை எவ்வாறு கையாண்டு கொண்டு போகிறது என்ற கருதுகிறீர்கள்?

**குமார்:** தமிழர் பிரச்சனை சம்பந்தமாக இந்த அரசாங்கம் ஒரு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்தில் இல்லை. அத்துடன் எதிர்க்கட்சிகளிற்கும் அக்கறை இல்லை. அவர்கள் நினைக்கிறார்கள், இப்போது புலிகளின் காலை நொருக்கினால் பின்னர் மற்றைய இயக்கங்களின் தலையை நொருக்கலாம் என்று. எங்களில் ஒரு சில தமிழர்கள்தான் எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டு, ஏதோ பெரிதாக நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது தொடர்பாக சில வதந்திகள் நிலவி வருகிறது. அவ்வாறு இலங்கை அரசாங்கம் கைப்பற்றுமானால் எப்படியான சூழ்நிலை வரும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**குமார்:** யாழ்ப்பாணத்தை அவ்வாறு கைப்பற்றுவது சாத்தியம் இல்லை. அப்படி கைப்பற்றுவதானால் அது எப்போதே நடந்திருக்கும். ஒரு சில இடங்களைக் கைப்பற்றலாம். முழுக்குடாநாட்டையும் கைப்பற்ற முடியாது.

**கேள்வி:** முஸ்லிம், தமிழ்க் கட்சிகளிற்கிடையிலான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுவருகிறது. அது சாதகமானதாகத் தென்படுகிறதா?

**குமார்:** இதைப்பற்றி இப்போது நான் நம்பிக்கை தெரிவிக்க முடியாது. ஏனெனில் முன்னரும் இதைப் போன்ற பல பேச்சு வார்த்தைகள் நடைபெற்று இறுதிக் கட்டத்தில், கையெழுத்து இடவேண்டிய கட்டம் வந்த நிலையில் சிலர் பின்வாங்கிவிட்ட சம்வங்களும் நிகழ்ந்துள்ளது.

**கேள்வி:** முஸ்லிம் தமிழ்க் கட்சிகளிடையே ஒரு இணக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போகும்போது வடக்கு, கிழக்கு இணைப்பை சாதிக்க முடியாமல் போய்விடும் அல்லவா. குறிப்பாக இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்கு இணைபுக்கான சர்வசன வாக்கெடுப்புக்கு போகும்போது?

**குமார்:** ஆம், தமிழர்களிற்கு தோல்வியாகத்தான் வந்து முடியும். ஆனால் அதற்கு முன்னர் எவ்வளவோ இரத்த ஆறு ஓடித்தான் ஆகும். முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களோடு இணையாத ஒரு சூழ்நிலையில் சர்வசன வாக்கெடுப்பு நடந்தால் இலங்கைப் படை யாழ்ப்பாணத்தை கால் நடையில் கைபற்றுவது மாதிரித்தான் வந்து முடியும்.

**கேள்வி:** இப்போது வடக்குக்கிழக்கில் நிகழ்ந்து கொண்டு போவதாகக் கூறப்படும் குடியேற்றத் திட்டங்கள் பற்றி முழுமையான தகவல்களை எவரும் வெளிக்கொணர்ந்தாகத் தெரியவில்லை. உங்களைப் பொறத்தவரை அது எந்த அளவு பாரதூரமானதாக உள்ளது?

**குமார்:** அது சம்பந்தமாக எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் இல்லாத காரணத்தால் உடனடியான தகவல்கள் எங்களிடம் இல்லை. நண்பர்கள் கூறுவதைத்தான் அறிய முடிகிறது. அவர்கள் சொல்லுகிறார்கள் வவுனியா, வெலிஓயா, திருகோணமலை போன்ற இடங்களில் இப்படி நடைபெறுவதாக. ஆனால் இவ்வாறு நடப்பதற்கு ஒரு காரணமுண்டு. எங்களுக்கு ஒரு அரசியல் அமைப்பு இல்லை. அதாவது ஒரு மாகாணசபையோ, அல்லது வேறு அதிகார அமைப்பொன்றோ இல்லை. மற்றது இப்பகுதிகளில் யுத்தம் நடந்து கொண்டு இருப்பதால் இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி சில சூழ்ச்சிகள் செய்ய வாய்ப்பு உள்ளது.

**கேள்வி:** நீங்கள் தீர்வுக்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு முன் வைத்துள்ள முன்மொழிவுகளை சுருக்கமாக கூறுவீர்களா?

**குமார்:** தீர்வு தனிநாடல்ல. ஐக்கிய இலங்கைக்குள் எமது காரியங்கை நாமே பார்த்துக்கொள்ளக்கூடிய வகையில் அமைய வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் முதல் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநிலத்திற்குள்ளேதான் எங்கள் தீர்வுகள் அமையவேண்டும் என்ற கோட்பாடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதை ஏற்காவிட்டால் வேறு விஷயங்களைக் கதைத்துப் பிரயோசனமில்லை. அப்படியான ஒரு நிலையில் வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு மாநிலம் ஆக்கக் கூடிய ஆட்கள் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டும். அதாவது நான் என்ன சொல்கிறேன் என்றால் இந்த ஆறை (வடக்குக் கிழக்கு இணைப்பை) நாங்கள் முதலில் கடக்க வேண்டும். அதில்தான் இப்போது எங்கள் முழுக்கவனமும் இருக்க வேண்டும். அது மாத்திரமல்ல, நாம் இப்படிக் கதைத்துக்கொண்டு போவதையும் நிறுத்தவேண்டும். ஐம்பது வருஷத்திற்கு கதைத்துக்கொண்டிருக்க நான் தயாராக இல்லை. என்னைப் பொறுத்தவரையில் வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்காதபட்சத்தில் தமிழ் மக்களிற்கு இருக்கக்கூடிய ஒரேயொரு தீர்வு, தனிநாடுதான். இதை நான் ஒரு பிரிவினைவாதியாக நின்று சொல்லவில்லை. அரசியல் மாணாக்கனாக நின்றே சொல்கிறேன்.

அதாவது இந்தப்பாதை இல்லை என்றால் அடுத்தது எந்தப்பாதை என்று சொல்வதைப்போல. இதனர்த்தம் நான் தனிநாட்டை ஆதரிக்கிறேன் என்பதுமல்ல, அதே வேளை இன்னின்னார்தான் போராடவேண்டும், இவர்கள் போராடக்கூடாது என்றும் நான் கூறவில்லை. போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் சரியாகத்தான் போராடுவார்கள் என்றும் சொல்லவில்லை. ஆக இது சாத்தியமில்லாவிட்டால் அடுத்த வழி அதுதான் என்பதை வெறுமனே கூறுகிறேன். சில நண்பர்களிற்கு இக்கருத்து பிடிக்காமல்கூட இருக்கலாம்.

**கேள்வி:** இந்திய இலங்கை ஒப்பந்தத்தையிட்டு உங்கள் கருத்தென்ன?

**குமார்:** ஒன்றுமில்லாத எங்களிற்கு இவ் ஒப்பந்தம் வரவேற்கக் கூடிய ஒரு விஷயம். அதை நாம் பகிரங்கமாக வரவேற்கிறவர்கள். இருப்பினும் ஐ. பி. கே. எஃப்ன் செயல்களை வன்மையாக கண்டித்தேன். அதனால் இந்தியா எனக்கெதிராக நடவடிக்கை எடுத்ததை உலகம் அறியும். இதேவேளை இவ்வொப்பந்தத்தை எந்தெவாரு தமிழ்க்கட்சியும் முழுமையாக ஆதரிக்கவில்லை. அதே வேளை முழுமையாக எதிர்த்ததாகவும் எனக்குத் தெரியவில்லை. எல்.ரீ.ரீ.ஈயும் கூட முழுமையாக எதிர்க்கவில்லை. சிலபல காரணங்களிற்காக அவர்கள் முழுமையாக ஆதரிக்காமல் விட்டிருக்கலாம். இவ்வாறு முழுமையாக ஆதரிக்காமல் இருக்க சில காரணங்கள் இருந்தன. சர்வ சன வாக்கெடுப்பு என்பது இதில் ஒரு முக்கியமான காரணம். எந்தவொரு தமிழ்க் கட்சியும் இவ் வடக்குக் கிழக்கு இணைப்பின் மீது சர்வசன வாக்கெடுப்பு நடப்பதை ஏற்கவில்லை. அரசாங்கம் கூட இச் சர்வவன வாக்கெடுப்பு பெரியதொரு பிரச்சனையை உருவாக்கும் என்பதால் ஒவ்வொரு வருடமும் அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டு போவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எம்மைப் பொறுத்தவரை தற்காலிகமான இந்த இணைப்பை நிரந்தரமாக்க வேண்டுமென்பதுதான் முதற் கோரிக்கை. இக்கோரிக்கையை ஏற்றால் சரி. ஏற்காவிட்டால் சதா சச்சரவுதான்.

**கேள்வி:** விடுதலைப் புலிகள் மீதான இந்தியாவின் தடை, தமிழ் மக்கள் பிரச்சனையில் எந்தவிதப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**குமார்:** பாதிப்பு இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அது இந்தியாவில்தான் அவர்களிற்கு கஷ்டத்தை உருவாக்கும், கடல் கடப்பதிலும் அவர்களிற்கு சிரமத்தை ஏற்படுத்தலாம். ஆனால் இது இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ இற்கு எதிராக பெரிய பாதிப்பு எதையும் ஏற்படுத்தும் என்று நான் நம்பவில்லை. அதனால் அது இலங்கையில் இப்போது இருப்பதைப் போன்று தடையின்றி இயங்கும்.

**கேள்வி:** மத்தியஸ்துவம் செய்வதற்கு வெளிநாடுகள் முன்வருவதை இத் தடை தடுக்காதா?

**குமார்:** இதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை.

**கேள்வி:** இதேபோல் வெவ்வேறு நாடுகளில் செயற்படுவதை இத் தடை பாதிக்காதா?

**குமார்:** அந்நாடுகள் இத்தடையை எவ்வாறு நோக்கும் என்று எனக்கு கூற முடியவில்லை.

**கேள்வி:** எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களை நாடுகடத்துவது பற்றிய இந்தியாவின் கோரிக்கையைப் பொறுத்தவரையில்....?



**இந்திய இலங்கை ஒப்பந்தம் வரவேற்க கூடிய விசயம். இருப்பினும் ஐ. பி. கே. எஃப் இன் நடவடிக்கைகளை கண்டித்தேன்**

***விடுதலைப்புலிகள் மீதான இந்தியாவின் தடையினால் புலிகளுக்கு இந்தியாவில் தான் கஸ்டத்தை ஏற்படுத்தும் இது இலங்கையில் எல். ரீ. ரீ. ஈ. இனருக்கு எதிராக பெரிய பாதிப்பு எதையும் ஏற்படுத்தும் என நான் நினைக்கவில்லை.***

**குமார்:** இது ஒரு சட்டப்பிரச்சனை. இக்கோரிக்கையை சுமூகமான முறையில் நிறைவேற்றலாம் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் இதில் இந்தியாவிற்கு எதிரான பல சட்டங்கள் இருக்கிறது. இதற்கு முதலில் அவர்களைக் கைது செய்யவேண்டும். கைது செய்வதற்கு அப்பாற்பட்ட வகையில்தான் அவர்கள் இயங்குகிறார்கள். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சம்பள நாள்

சம்பளப்பணத்தை வாங்கிக் கொண்டு படிக்கட்டால் அலுவலகத்திலிருந்து இறங்கும் போது நினைத்தேன், ஏன் நான் இயந்திரம் போல் இறங்கவேண்டும்? என்னிடம் இப்போது பணம் இருக்கிறது. இத்தனை நாளும் நான் அழுக்குச் சட்டை போட்டிருப்பவன் போலக் கூசிக் கூசி நடந்தேன். எனக்கு அதுவே பழக்கமாகி விட்டது போலும். ஒரு காசுக்காறன் எவ்வளவு மிடுக்காக, எவ்வளவு ஆறுதலாக நடக்கிறான். தான் நிமிர வேண்டும். இந்த உலகத்தை கண்ணுக் கெட்டிய தூரம் வரை நான் பார்க்கலாம்.

நான் சற்று நின்று சுற்றுமுற்றும் பார்க்கிறேன். எல்லோரும் எங்கோ ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் ஒருவரும் நின்று இந்த உலகம் என்னுடையது. என்று நினைத்து சுற்றுப்புறத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்க மாட்டார்களாம்? கடிகாரமுள் போல, மரணம் வரை, எப்போதும் ஓடிக் கொண்டேயிருப்பார்களோ?

அதோ அந்தப் பிச்சைக்காரன் என்னைப்பார்க்கிறான். இந்த ஒரு மாதகாலமாக அவன் என்னிடம் சம்பிரதாயத்தனமாக பிச்சை கேட்டபடிதான் இருக்கிறான். நான் கொடுத்ததில்லை. இப்போதும் என்னைப் பார்க்கிறான். பிச்சைக்காரனுக்கு நான் ஏன் காசு போடவேண்டும்? இல்லை போடவேண்டும். அவன் என்னை இன்னும் ஒரு காசில்லாதவன் என்றுதான் பார்க்கிறான். நான் ஒரு ரூபாய்க் குத்தியொன்றை பொருட்டில்லாமல் துண்டில் போட்டு விட்டு அதே பாட்டிற்கு நடந்தேன். என் முதுகில் அவன் வியப்புடன் பார்ப்பது போல உணர்வு. பார்க்கட்டும். நான் திரும்பிப் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் நான் ஏதோ, புதிசாக் காசு கிடைத்த எண்ணத்தில் இருப்பதாக நினைக்கலாம்.

"அடே எங்கடாப்பா இங்காலப் பக்கம். வலு கூலா நடக்கிறாய்".

முதுகில் தட்டிய கையை இனங்காண திடுக்குற்று திரும்பி பார்த்தேன். ஓ! இவன் எனது பள்ளிக்கூட நண்பன். "அட...... நீயா......? நான் நினைக்கவேயில்லை."

"நீங்கள் எல்லாம் எங்கடா எங்களை நினைக்கப் போறியள். நாங்கள் வயித்துப் பாட்டுக்கு தெருத் தெருவாய்ச் சுத்திறம்."

"அதில்ல. உன்ன எடுத்தாப் போல மட்டுக்கட்ட முடியேல்ல. சரியாய் மெலிஞ்சு போனாய். இதென்ன கோலம்?"

"அதுதான் சொன்னேனே தெருத் தெருவாய் சுத்திறனெண்டு. தெருநாய் எப்பவேனும் கொழுத்துக் கிழுத்து இருக்கிறதோ?"

"சும்மா எதுக்கெடுத்தாலும் ஒரு விரக்தியாக் கதைக்காத. நீங்களெல்லாம் நினைக்கிறது இப்படிக் கதைக்கிறது ஒரு மேதாவித்தனமெண்டு."

"பின்ன என்னடா, வாழ்க்கையெண்டா ஒரு பிடிப்பிருக்க வேண்டாம்? இது விடிஞ்சாப் பொழுதுபட்டா எப்பவும் பிரச்சனைதான். விடிஞ்சா இண்டயப் பாட்டுக்கு என்ன செய்யிறதெண்ட பிரச்சனை, பொழுதுபட்டா நாளைக்கு என்ன செய்யிறதெண்டது."

"பிரச்சனை யாருக்கடா இல்லாமலிருக்கு. எல்லாத்தையும் நாங்கள் எப்பிடி எடுத்துக் கொள்ளிறம் எண்டதிலதான் எல்லாமே இருக்கு.

"நீ பேசலாமடா. உனக்கென்னடா தெரியும் என்ர பிரச்சனையைப் பற்றி. சரி, தெரிஞ்சாப் போல நீ என்ன தீர்த்து வைக்கப் போறியா?

"தெரிஞ்சா நானும் ஏதாவது புத்திமதி சொல்லலாம்."

"புத்திமதி சொல்லத்தான் இங்கே ஆயிரம் பேர் இருக்கிறாங்கள். எவண்டா உதவுகிறான்? ஏன் உன்னையே எடு. ஒரு வேளை நீ இருந்து ராமாயணம் கேட்ட மாதிரிக் கதை கேக்கலாம். பிறகு I feel very sorry for you மச்சான், எண்டு சொல்லிப் போட்டுப் போவாய்."

"நான் அந்த மாதிரி ஆள் இல்லடா." •
All the fingers are not same. You see. I am a different man

"You mean it?" "அவன் என்னை ஏற இறங்கப்பார்த்தான்" சரி வெள்ளனவே சொல்லிறன் விஷயம் சென் சிட்டிவானது. நீயா விரும்பினால்; வா அந்த Restaurant டில் இருந்து பேசுவோம். றோட்டில இருந்து இதப் பேச ஏலாது." நான் தலையசைத்தேன்.
நடந்தோம்.

இவனும் என்னை இளக்கமாய் நினைக்கிறான். அந்தப் பிச்சைக்காரன் போல். நான் என் அறிவினில் இருந்து விடயங்களைச் சொல்லும் போது இவன் சர்வ அலட்சியமாய் அதை ஒதுக்கி விடுகின்ற விதம் என் அறிவை நையாண்டி செய்வது போல இருக்கிறது. மனிதர்களுக்கு ஒரு விடயத்தை வெளியிலிருந்து புரிந்து கொள்வதற்கு அகந்தை பிடித்த மனம் தடுத்துக் கொண்டிருக்கிறது. தங்கள் தலைக்குள் களிமண்ணை ஏற்றி வைத்துக் கொண்டு மற்றவர்களை மர மண்டையர்கள் என்று நினைக்கிறார்கள்.

"வா அந்த மூலையில போய் இருப்போம்."

"சின்ன மேசை. மெல்லிய சிகப்புத் துணிவிரித்திருந்தார்கள். சாதுவான இருட்டை செய்து, வித்தியாசமான ஒரு அமைதியை நிலவ விட்டிருந்தார்கள். போத்தல்கள், கிளாஸ்களின் சின்னக்கலகலப்புகளும் ஒவ்வொரு காதுகளுக்குமிடையேயுமான குசு குசுப்புகளும். புதிய உலகம். எல்லாம் மௌனமாக அசைந்தன.

சர்வர் பணிவாக வந்து அருகில் நின்றான். அவன்தான் யாவற்றையும் ஓடர் பண்ணினான்." ஒல்ட் அராக் அரைப் போத்தல், கொக் ஒன்று, சிகரட்..... ? கேள்வியோடு என்னைப்பார்த்தான், நான் வேண்டாமென்று கையசைத்தேன்.
"பிறிஸ்டல் ஒரு பக்கட்"
ஓடர்களை குறித்துக் கொண்டு சர்வர் மறைந்தான்.
"நீ முதல்ல என்னை மன்னிக்கவேணும். எதுக்கெண்டால். என்னட்ட இப்ப ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சதக் காசும் இல்ல."

இது பெரிய செலவா எனக்கு, விட்டுத் தள்ளு விஷயத்திற்கு வா. உனக்கென்ன பிரச்சனையெண்டதச் சொல்லு முதல்ல"

அவன் பெரிய கதையொன்று சொல்லப் போகிறவன் போல நீண்ட யோசனைக்குள் புதைந்தான். தலையை கவிழ்த்துக் கொண்டான். பின்னர் தோள்களை உலுப்பியபடி சொன்னான். "இங்கேயே பிரச்சனை தொடங்கிவிட்டுதே, இந்த பில்லைக் கட்டக்கூட என்னட்டக் காசில்லை"

நான் நிமிர்ந்தேன், "அப்ப கடைசியாக உன்ரை பிரச்சனை காசுதானா?"

சர்வர் பணிவாக இரண்டு கிளாஸ்களை இருவர் முன்னேயும் வைக்கிறான். குனிந்து bites sir? நான் முன்னால் கேள்வியாய் பார்க்க அவன் எது வென்றாலும் என்பது போல் கையை ஆட்டினான். "pototo ships" அவன் நகர்ந்தான்.

"காசெண்டால் என்னெண்டு நினைக்கிறாய்?" கேட்டுக் கொண்டே தனது கிளாசில் ஊற்றினான்.

நான் எனக்கு விடப்பட்ட கேள்விக்கு நல்லதொரு பதிலைக் கொடுக்க ஒரு ஆழமான சிந்தனைக்குள் புகுந்தேன். எனக்கும் ஒரு கிளாசில் ஊற்றி விட்டு கொக்கை கலந்து என் பக்கம் நகர்த்தினான். கலந்து கொண்டே சொன்னேன். பொருட்களைப் பரிவர்த்தனை செய்வதற்கான கருவி" A means for exchange of goods"

"எனக்கு அப்படியில்லை. அது உணர்ச்சிகளைப் பறிமுதல் செய்வதற்கான கருவி. " A means for deprivation of human feelings" சொல்லிவிட்டு கிளாசை உயர்த்தி "சியேஸ்" என்றான்.

மெதுவாக உறிஞ்சினேன். குளிரான மதுவை மூளை தனக்கு உதவிக்காக மெதுவாக வரவேற்றது. நான் அவனது கூற்றை எதிர்க்க முடியவில்லை. அவனது திசையை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். அவன் எந்தத் திசையில் செல்கிறான் என்பதே பிடிபடவில்லை. அதனால் அவனையே தொடரவிட்டு அவன் பதிலுக்காக காதைக் கொடுத்தபடி கேட்டேன். "SO?"

"அன்பு, பாசம், இரக்கம், மனிதாபிமானம், எல்லாத்தையும் காசு மனிசனிட்டயிருந்து பறிச்சுப் போடுது." அவன் ஒரு ஸிப் உறிஞ்சி விட்டு என்னைத் தாண்டி எங்கேயோ பார்த்தான். பார்த்தபடி சொன்னான். "பணத்தால அடிக்கிறதெண்டா என்னெண்டு உனக்கு தெரியுமோ....?"

நான் பேசவில்லை. தொடர்ந்தான்.

"அவளுக்கு தன்ர தமையன்மாரும் தமக்கைமாரும் கேட்கிற நேரம் எல்லாம் காசு கொடுப்பினம் என்ற கொழுப்பு. எல்லாருமே என்னை செருப்பால அடிச்சு மூலையில கொண்டு போய் போடாத குறை."



என்ரமகன் என்னைக்கண்டால் ஒரு பூச்சியைப் பார்க்கிறமாதிரி அருவருக்கிறான்.

அவன் மட மடவென்று கிளாஸில் உள்ளதைக் குடித்துப் போட்டு என்னைப் பார்த்தான். நான் எனது கிளாசை உறிஞ்சியபடியே அவனைப் பார்த்தேன். கிளாசை நிரப்பிக் கொண்டே சொன்னான்." அடேய் என்ர வீட்டு நாய் கூட எனக்கு வாலாட்டுகிறதில்லையடா."

அவன் வருகிறான். அந்த வழி எனக்கு இப்போ புலப்படுகிறது பொறுத்திருந்தேன். இன்னும் அவன் சொல்லி முடிக்கட்டும்.

"அவள்..., அவள என்னெண்டு சொல்லுகிறது. என்ர உத்தம பத்தினி, அவள் நான் எங்கேனும் போட்டுத் திரும்பி வந்து கதவைத் தட்டினால் என்னண்டு வந்து திறக்கிறாள் தெரியுமா?"

அவன் சிகரட்டை பற்ற வைத்து உறிஞ்சிவிட்டுச் சொன்னான். தாழ்ப்பாள் நொங் கெண்டும், கதவு படீரெண்டு திறந்து சுவரில் அடிக்கும். "வாங்கோ" என்டு ஆறுதலுக்கு ஒரு வார்த்தை? ஊஹூம். அவசரமாய்த் திரும்பிப்போய் கதிரையில் கவிழ்த்திட்டு வந்த ஆனந்த விகடனுக்குள்ள புகுந்து விடுவாள்.

சர்வர் வந்து சிப்ஸ்சை வைத்து விட்டு போனான். நான் இரண்டைப் பொறுக்கி வாயில் போட்டு நறுக்கி கொண்டேன். எனக்கு இப்ப விஷயம் பிடிபடுகிறது. மூளைக்குள்ளே ஒரு பதில் மெதுவாக உருவாகிறது. மதுவின் உதவியோடு அவனுக்குத் தைக்கும்படியாக இதை நான் உருவாக்கியெடுக்க வேண்டும்.

"அடே என்ர மகன் என்னைக் கண்டா ஒரு பூச்சியைப் பார்க்கிற மாதிரி அருவருக்கறாண்டா!"

அவன் என்னை ஒரு திகைத்த பார்வையுடன் பார்த்தபடியிருந்தான். கண்களில் சிந்தனையின் கலவரமும் மதுவின் ரத்தக் கொதிப்பும் சிகப்படித்தது.

இனி நான் பேச வேண்டும் விடயத்தை எப்படி போடுறது? நான் அவனைப் பார்க்கிறேன். முகத்தில் சவரம் செய்யாத தாடி. முள்ளம் பன்றி போல. ஏன் இப்படி இருக்க வேணும்? இது இவர்களுக்குள்ள ஒரு "கொம்ப்ளெக்ஸ்". எதிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுக்கு அவவுக்கு எங்கால காசு?"

என்னை எதிர் நோக்காமலே தன் பாட்டுக்குப் பதில் சொன்னான். "யாரிட்டயேனும் தண்டியிருப்பாள்."

இப்போது என் மூளைக்குச் சொன்னேன். நீ சரியான இடத்திற்கு வந்து விட்டால் அவனைக் குழப்பாதே. கவனமாகப் போ. மெதுவாக, ஒவ்வொரு அடியாக அன்மி. நீ விலங்கைப் பூட்டி விடுவாய்.

நான் தொடர்ந்து கேட்டேன். "யாரிட்டையாவதா"? தெருவில் இல்லையே?"

அவன் பதில் பேசவில்லை. கேள்விக்குச் சம்பந்தமில்லாதவன் போல் bites ஐ தின்று கொண்டு கிளாசை முடிப்பதில் கவனம் காட்டினான். அவனுக்கு இந்தக் கேள்விகள் போகும் திசை பிடிக்கவில்லை போலும்.

நான் கேள்வியின் போக்கை கொஞ்சம் திருப்பினேன். "உன்ர பழைய வேலையை ஏன் றிசைன் பண்ணினாய்?"

அவன் கண்களில் மாறுதல் தெரிந்தது. பழைய வேகம் திரும்பவும் வந்தது. வார்த்தைகளில் சூடு தட்டுப்பட்டது.

அவங்கள் என்னை அடிமையெண்டு நினைச்சிட்டாங்கள். நான் என்ர திறமையை வேலையில காட்டுவன் அவங்கள் அதுக்கு சம்பளம் தரவேணும். மற்றப்படி இதில யாருக்கும் யாரும் கீழ்ப்படிஞ்சு போகத்தேவையில்லை. அப்ப நான் ஏன் மற்றவங்கள் போல மனேஜருக்கும், அவைக்கும், இவைக்கும் போய் வாலாட்ட வேணும், பல்லிளிக்க வேணும்? அவங்கள் என்ர வேலையில சரி பிழையைப் பார்க்கிறாங்களில்லை. தங்களுக்கு நான் சலூட் பண்ண வேணுமெண்டும், சேர் சொல்லவேணுமெண்டும்தான் பார்க்கிறாங்கள். என்னோடை இது சரிவராது. போடா போ எண்டு றிசைன் பண்ணிட்டு வந்திட்டன்.

"ஆனால் இன்னும் உன்ர பெண்சாதி உன்ன விட்டு றிசைன் பண்ணேல்ல?"

அவன் வினோதமாகப் பார்த்தான். நான் என் மூளைக்குச் சொல்லிக் கொண்டேன். இது தான் சரியான தருணம். வாலியை வீழ்த்த சுக்ரீவன் ராமனுக்கு காட்டிக் கொடுத்த அதே தருணம். எய் உனது பாணத்தை. அவன் வீழ்வான்.

"நீ மட்டும் உன்ர மேலதிகாரிகளுக்கு பல்லிளிக்க மாட்டாய், றிசைன் பண்ணிட்டு வந்துடுவாய். ஆனால் உன்ர பெண்சாதி மற்றவயளுக்கு பல்லிளித்து உனக்குச் சாப்பாடு போடவேணும், உன்ர குடும்பத்தை நடத்த வேணும்."

அவன் திகைத்தான்.

"நீ உன்ர குடும்பத்தை நடத்தாதது பத்தாம அவ தேடிக் கொண்டு வந்து போடுகிற சோத்தைத் திண்டுகொண்டு யாரிட்டையாவது தண்டிக்கொண்டு வந்திருப்பாளென்று சொல்லிறியே அதுக்கு நீயேதான் காரணமெண்டு உன்ர புத்திக்கு படேல்லையோ? உனக்கு ஆபீஸில் வந்த தன்மானம் வீட்டில உன்ர பெண்சாதிக்கு கொஞ்சமாவது இருக்கக்கூடாதா? அவளால உன்னைப் போல றிசைன் பண்ணிட்டுப் போகமுடியேல்ல. அதனால தன்ர கோபத்த உந்த மாதிரிக் காட்டுறா. இதப் புரிஞ்சு கொள்ள முடியேல்லடா. நீயெல்லாம் என்னடா?"

என்னையே பார்த்தபடியிருந்தான் நான் தொடர்ந்தேன் "நீ மூக்கு முட்டக் குடிச்சுப் போட்டு முச்சையறுந்த பட்டம் போல சாராயநெடி வீச வீச கதிரையில போய் விழுந்தால் எந்தப் பிள்ளை அப்பா எண்டு ஓடி வந்து உன்ர மடியில குந்தும்? உனக்கு கிட்ட வர அருவருக்கிறதில என்னடா பெரிய அதிசயம்?"

அவன் பதில் சொல்ல விளையவில்லை.

"நீ பெண்சாதி பிள்ளைகளின்ர நினைவேயில்லாம எங்கயோ திரிஞ்சுபோட்டு நினைச்ச நேரத்திற்கு தள்ளாடிக் கொண்டு வீட்ட போய் கதவைத் தட்டினால் விழுந்தடிச்சுக் கொண்டு ஓடி வந்து வாங்கோ வாங்கோ எண்டு கதவைத் திறந்து விட அந்தக் காலத்து நளாயினிகளா என்ன இப்பத்த பொம்பளைகள்?"

"You told me, there is another side for every thing. The bitter side. Yes!. This is that" இதுதான் உன்ர பெண்சாதியின்ர கோவத்துக்கும் அலட்சியத்துக்கும் பின்னால இருக்கிற அந்தக் கசப்பான பக்கம்."

தான் எய்த அம்பு தனக்கே திரும்பி வருமென அவன் எதிர்பார்க்கவில்லை. வாய் திறக்க வில்லை.

சர்வர் தயக்கத்துடன் "Anything else Sir?"

"No. Make the bill please".

நான் தொடர்ந்தேன் "நீ ஒரு வேலையைத் தேடிக்கொள். குடும்பத்தைப் பொறுப்பெடு. எல்லாமே மாறும் இருந்துபார்."

அவன் ஆழ்ந்து யோசிப்பவன் போலப்




"காசு, உணர்ச்சிகளை பறிமுதல் செய்வதற்கான கருவி" சொல்லிவிட்டு கிளாசை உயர்த்தி சியேஸ் என்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்கறையின்றி இருக்கிறார்கள் என்று மற்றவர்கள் எண்ண வேண்டும் என்பதற்காக விட்டு வைத்திருக்கும் தாடி.

நான் தொடங்கினேன். "நான் கேட்கிறனெண்டு குறை நெய்யாத, நீ கொஞ்சம் ஒழுங்காய் சேவ்எடுத்து கிடுத்து இருக்கலாமே?"

"யாருக்கு....? அட கட்டின பெண்சாதியே புருஷன் இப்படியிருக்கிறானே எண்டு கவலைப்படல்ல.. அப்ப யாருக்காக நான் ஒழுங்காக வேணும்?

எனக்கு பதில் வரவில்லை. ஆனால் அவனே திரும்பவும் மெதுவாக தலையாட்டியபடி சொன்னான். "எண்டாலும் எனக்கு அதில கொஞ்சம் திருப்தி."

"திருப்தி.....?"

"ம்"..... நாலு பேர் அவளிட்டப் போய் உன்ர புருஷன் பறுகு போலத் திரிகிறான் எண்டு கேக்கக்கையாவது அவள் கொஞ்சம் அவமானப்படுவாள்."

ஓ.... இவனுக்குள்ள ஒரு முரடன் இருக்கிறான். இந்த வழியால் இனித் தொடர்ந்து போக முடியாது. புதிதாகத் தொடங்க வேண்டும். "நீ இப்ப சரியாக க்குடிக்கிறியா?"

அவன் ஒரு வகையாச் சிரித்தான். பிறகு கிளாசில் திரும்பவும் மதுவை நிரப்பினான். என்னைப் பார்த்தான்.

நான் திருப்பிக் கேட்டேன். "ஏன் இப்படிச் செய்கிறாய்?"

"நான் இன்னொருத்தனை உருவாக்கவேணும். என்னிலும் பெலசாலியான, என்னை விட கூடச் சத்தம் போடக்கூடிய, என்னைவிட மற்றவைய வெருட்டக்கூடிய, ஒருத்தனைத்தான் உருவாக்க வேணும். எனக்குள்ளேயே உருவாக்க வேணும். நான் வீட்ட போனால் எல்லோரும் கப்சிப்பெண்டு இருக்கவேணும். எலிக்குஞ்சுகள் போலக் கதிரைகளுக்குப் பிறத்தால பதுங்க வேணும்.

"வெருட்டி அன்பைப்பெறலாமெண்டு நினைக்கிறியோ?"

"அன்பு.....? அதுதான் எப்பவோ ஓடிட்டுதே, யன்னல் வழியால. வறுமை வாசற்படியை மிதித்தாற் போதும். அன்பு யன்னல் வழியால ஓடிப்போகும்." சிரித்தான் சிப்சை அள்ளி வாயில் போட்டுக் கொண்டான்.

"என்னை மதிக்காட்டால் பரவாயில்லை, மிதிக்காமல் இருக்கட்டும் எண்டு பார்க்கிறன், அவ்வளவுதான்.

இது ஒரு முரட்டுத்தனம் பிடித்த தாழ்வு மனப்பான்மை. விஷயங்களைப் புரிய வைக்கிறது சரியான சிரமம். இதை இளகவைக்க வேண்டும். இந்த வழியும் பிழை. . இன்னொரு இடத்திலிருந்து தொடங்க வேண்டும்.

"நீ இப்ப என்ன செய்கிறாய்?"
"சும்மாயிருக்கிறேன்."
"சும்மா.....?"
"ம்"
"உனக்கு தெரியுமா, எப்படி பொருள் பண்டங்கள் எங்கட சொத்தோ அது போல நேர மெண்டிறதும் எங்களுக்கு கிடைச்ச ஒரு சொத்து. வித்தியாசம் என்னவெண்டால் இது விரையமாக்கிக் கொண்டிருக்கிற சொத்து. வீணாகிக் கொண்டிருக்கிற ஒவ்வொரு நிமிசமும் நாங்கள் நஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். "Time is a wasting asset."

"நேரத்தைப் பற்றி நான் கவலைப்படுறதில்லையடா. என்னைப் பொறுத்தவரைக்கும் Time is a one way route to the grave." சவக்குழிக்குப் போற ஒரு வழிப் பாதை. அழியப் போறதுதான் எண்ட பிறகு நேரம் பொன்னாயிருந்தாலென்ன மண்ணாயிருந்தாலென்ன? End is grave no?

"மச்சான் நீ எப்பவும் மற்றப் பக்கம்தான் பார்க்கிறாய். எல்லாத்தையும் நெகட்டிவ் வாய்த்தான் எடுக்கிறாய்."

"இப்பவேணும் உங்களுக்கு தெரியுதா எதுக்கும் மற்றப் பக்கமெண்டு ஒண்டு இருக்கெண்டு. நீங்கள் ஏன் அத சிம்பிளா இக்னோர் பண்ணி விடுகிறீங்கள்? அது கசப்பான பக்கமெண்டா?"

"இல்ல மச்சான். நீ சரியான விரக்தியாப் பேசுகிறாய் அது தான் உன்ர வார்த்தைகளெல்லாம் கொதிக்குது. நீ சாதாரண மனிசரப்போல யோசிக்க வேணும் மச்சான்."

"எது சாதாரணம்? எது அசாதரணம்? எனக்கு பைத்தியம் எண்டு சொல்லுகிறாயா?"

"இல்லடா எதையும் பிழையான அர்த்தத்தில எடுக்காத. பைத்தியமெண்டிறது எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது. அளவிலதான் வித்தியாசப்படுகிறது. அளவுக்கு மீறிப் போகேக்க 'பைத்தியம் பிடிச்சிட்டுது எண்டிறம். கோபம் கூடிக் கொண்டு போனாலும் பைத்தியம் வருது. நீ பார்த்ததில்லையோ, கோப்பையை தூக்கி வீசுவோம்; சட்டியைப் போட்டு உடைப்போம். இது பைத்தியக்காரன் செய்யிற வேலை தானே. ஆனால் திரும்பவும் நாங்கள் கூலான பிறகு அது போயிடுது. இதப்போல கவலையும் பைத்தியத்திற்கு கொண்டு போகலாம், ஆசையும் பைத்தியத்திற்கு கொண்டு போகலாம். எங்கட எல்லா உணர்ச்சிகளுமே அளவிற்கு மீறினால் பைத்தியமாக்கிப் போடலாம்."

நான் அவனைப் பார்த்தேன் கேட்டுக் கொண்டிருந்தான். "ஆனபடியால்தான் சொல்லுறன், என்னதான் பிரச்சனைகளெண்டாலும் கோபத்திலையோ, விரக்தியிலையோ கவலையிலையோ அல்லது எந்த உணர்ச்சியிலிருந்தெண்டாலும் நாங்கள் முடிவு எடுக்கக்கூடாது."

நான் தொடர்ந்தேன். "நாங்கள் எல்லாவற்றையும் balance பண்ணிக் கொண்டு இருக்கிறம். ஏதாவது ஒரு பக்கம் கூட அழுத்தினாலும் தடுமாறி விழ வேண்டியதுதான்.

நான் திரும்பவும் பழைய இடத்திற்கு வந்தேன். "நீ சும்மா இருக்கிறனெண்டிறாய். அப்ப வீட்டுச் செலவுக்கு எப்படிக் காசு கொடுக்கிறாய்?"

"குடுக்கிறதில்லை." பட்டென்று சொன்னான்.

நான் வியப்போடு அவனைப் பார்த்தேன். இவன் என்ன இவ்வளவு சுலபமாய் அந்த விடையைச் சொல்கிறான். நான் மெதுவாக குனிந்து அவன் முகத்திற்கு நேரே கேட்டேன். "இப்பவும் உனக்கு அவ மூன்று நேரச் சாப்பாடு போடுறாவெல்லோ?"

அவன் மௌனமானான். பார்வையை விலக்கி முகட்டைப் பார்த்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்தான். பிறகு மெதுவாகச் சொன்னான். வேலை என்ன மரத்தில காச்சிருக்கா?

"மரத்தில காச்சில்லத்தான் அதே நேரத்தில எந்த ஒரு அதிசயப் பருந்தும் நீ குந்தியிருக்கிற இடத்துக்கு காவிக் கொண்டுவந்து மடியில போட்டிட்டுப் போகப் போறதில்லை."

"அப்ப என்னை என்னடா செய்யச் சொல்லிறாய்?"

ஓ! நான் ஜெயித்து விட்டேன். ஆணவத்தை ஒடுக்கி அறிவின் ஒளியில் மனிதனைப் பார்க்க வைப்பது எவ்வளவு சிரமம் ஆனாலும் நான் வென்றுவிட்டேன். மண்டியிட்டு வா, அப்படி? ஒரு கீதையை உபதேசம் செய்வதுபோல நான் உனக்குச் சொல்லித் தருவேன். நான் புன்னகைத்தேன். காலியாயிருந்த கிளாசை உள்ளங் கைகளுக்கிடையே உருட்டிக் கொண்டு நான் சொல்லத் தொடங்கினேன். "நீ முதல்ல போய் ஒரு கிளீன் சேவ் எடு. குடிக்கிறதை விடு. வீட்டுக்கு நேர காலத்துக்கு போ."

சர்வர் பில்லைக் கொண்டு வந்து வைத்தான். நான் எடுத்துக் கணக்குப் பார்த்தேன். நூற்றி எண்பத்தைஞ்சு ரூபா காட்டியது. நான் ஒரு ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து வைத்து விட்டுத் தொடர்ந்தேன்.

"சரி, பிறகு நீ கொஞ்சம் வீட்டு விஷயங்களில் அக்கறை எடு. பிள்ளையின்ர படிப்பைப் பற்றிப்பார். பெண்சாதிக்கு அன்றாட வேலைகளில ஒத்தாசை ஏதும் செய்யலாமோ எண்டு பார். பேப்பரைப் பாத்து சின்சியரா வேலை தேடு. உனக்கு மற்றவயளுக்கு கீழ வேலை செய்ய ஏலாதெண்டால் நீயே சொந்தத்தில் ஏதாவது முயற்சியில் இறங்கு. ஒரு கோழிப்பண்ணையோ, தோட்டமோ, அல்லது ஒரு பிஸ்னஸோ ஏதாவது. சும்மாயிராதே."

அப்ப நிலைமை மாறுமெண்டிறியா?"

"ஓ! நிச்சயமா? எப்பவேனும் சந்தர்ப்பம் கிடைத்தால் பெண்சாதியிட்ட நீ நடந்து கொண்ட விதத்திற்கு வருத்தம் தெரிவித்துக்கொள். அப்பபார், அவதானும் தன்ர பிழைகளைப் பற்றி வருத்தப்படுவா. பிறகு பழையபடி சந்தோசம் திரும்பும்."

அவன் யோசித்தான் பிறகு சொன்னான் "முயற்சித்துப் பார்க்கிறேன்".

"முயற்சி செய் மச்சான். எல்லாம் சரி வரும்."

மிச்சக்காசு வந்தது நான் ஒரு ஐந்து ரூபாய்க் குத்தியை tips க்கு விட்டு மீதியைக் கையிலெடுத்தேன்.

"மச்சான் எனக்கு நீ உதவலாமென்டால்..... எனக்கு ஒரு சின்ன யோசனை வருது."

என்ன?

"என்ர மகன்ர பிறந்தநாள் நாலைஞ்சு நாளில வருது. அதுக்கு பிரசன்ட் ஒன்டு வாங்கிக் குடுத்துக்கொண்டு தொடங்கலாமெண்டு பாக்கிறன்."

"சரி வாங்கிக் குடு."

"அதுக்கு கொஞ்சம் காசு வேணும். நான் வேலையெடுத்தால் முதல் சம்பளத்தில திருப்பித்தருவன்."

அவன் நான் கையில் வைத்திருக்கும் முன்னூறு ரூபாவைப் பார்க்கிறான். குடுக்கத்தான் வேணும். ஒரு நல்ல வேலையைக் கெடுக்கக் கூடாது. அவன் என்னை கொஞ்சம் மதிப்பாகப் பார்க்கிறான்.

பணம் கை மாறியது. எழும்பினோம்.

"தாங்க்யூ மச்சான். நல்ல நிலமை வந்தால் நான் உன்ன லஞ்சுக்கு கூப்பிடுவன் கட்டாயம் வரவேணும்."

ஓ. யெஸ் "கட்டாயம்."

பிரிந்தோம்.

* * * * *

நான் பஸ் ஸ்டாண்டில் நிற்கிறேன். சூரியன் எவ்வளவு விரைவாகத் தொலைந்து போனான். வீட்டில் என்னைத் தேடப் போகினம். சீ.... கதையில நேரம் போனதே தெரியேல்ல.

"என்ன மச்சான் இன்னடைக்கு இவ்வளவு லேட்டாப் போறாய்?"

அடே நீயா? வா. அது வந்தடா, உனக்கு தெரியுமல்லோ அவன் எங்களோட படிச்சான் மச்சான்..... நான் நடந்த உரையாடலை சுருக்கமாக சொன்னேன்.

"பாவண்டா, இவனுக்கு வேறொண்டுமில்லை சரியான இன்ஃபீரியரிட்டி கொம்ப்ளெக்ஸ்". என்னுடைய கன்டு பிடிப்பு, என்னுடைய அணுகுமுறை, என்னுடைய வெற்றி, என்னுடைய புத்திமதி, என்னுடைய பரந்த மனப்பான்மை, என்னுடைய பரோபகாரம் எல்லாம் தம்பட்டமேயின்றிச் சொன்னேன்.

"எட மடையா. நீ கடைசியில அவனுக்கு காசு குடுத்திட்டியோ?"

"ஓம். ஏன்?"

"நீ துலைஞ்சாய் போ!"

"ஏன்?"

"இப்படிக்கதைச்சுத்தான் என்னட்டையும் கொஞ்ச நாளுக்கு முதல் காசு வாங்கினான். அதைக் கொண்டு போய் குடிச்சு முடிச்சுட்டான்." இப்ப உன்னட்ட........

"அவன் பிள்ளைக்கு பிறந்த நாள் பிறஸன்ட் வாங்கவெண்டல்லோ....."

"போடா மடையா. பிறஸன்ட்டாவது மண்ணாங்கட்டியாவது. நாளைக்கே முழுவதையும் குடிச்சிட்டு நிப்பான். அவன் திருந்திறதெண்டால் என்னோட திருந்தாம ஏன் உன்னட்ட வந்தவன்? தலையைக் குடுத்து மிளகாய் அரைக்கப்பண்ணிட்டாய். நல்லாச் சுத்திட்டான். சரி, வேளைக்கு வீட்ட போய்ச்சேர். நான் வாறன்."

நான் ஏமாந்து போனனா? காற்றை திறந்து விட்ட பந்துபோல நான் ஏன் சுருங்குகிறேன். ஓ, இவன் என்னைக் காணாமலே போயிருக்கலாம். போலியான வெற்றியின் பூரிப்பிலாவது நான் இழப்பை சமப்படுத்திக் கொண்டிருப்பேன். மொத்தம் ஐநூறு ரூபா! எனக்கு இது எப்படி தவறிப்போனது? ஒரு பிரயாணத்திற்கு பிறகு அலட்சியமாக வீசும் பஸ்டிக்கெட்டைப் போலல்லவா இதை வீசி எறிந்திருக்கிறேன்.

நான் இப்படியே சிந்தித்தால் தலை வெடித்துப் போவேன். நாளைய பிரச்சனைகளைத் தொட்டுப்பார்க்க வேண்டாமென்று என் புத்தியின் கால்களைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்கிறேன். எனக்கு உடனே வீடுவேணும், கட்டில் வேணும், கண்களை இறுக மூடின தூக்கம் வேணும். அதன் பின் மனைவி பொக்கற்றினை தடவி மீதிக் காசை எடுத்துக் கொள்ளட்டும்.

* * * * *

நான் திரும்பவும் அலுவலகத்திற்கு நடக்கிறேன். மனைவியின் உம்மென்ற முகம் படலையில் விடை தந்தது பாதை முழுக்க நினைவோடு சேர்ந்து கொள்கிறது. போன மாதக் கடன்களைத் தூக்கிக் கொண்டு அடுத்த மாதத்தை நோக்கி நடக்கிறேன். பயணம் இளைப்பைத் தருகிறது. ஓடும் மனித யந்திரங்களுடன் நானும் விதிவிலக்கின்றி இணைந்து கொள்கிறேன். என்னால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. நான் இப்போ திரும்பவும் அழுக்குச் சட்டை போட்டிருப்பவன் போலக் கூசிக் கூசி நடக்கும் பழைய மனிதன். பிச்சைக்காரனின் பழகிய குரல் "ஐயா" என்று காதில் கேட்டும் கேட்காதவன் போல நிலத்தைப்பார்த்து ஆபீஸ் படியேறுகிறேன்.

– மனுதர்மன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 8ம் நம்பரும் 7 1/2 சனியனும்

"இன்றைக்கு 17ம் திகதி. நான் காலையிலேயே நினைச்சன் ஏதாவது பிரச்சனைகள் வரும் என்று....... இன்றைக்கு யார் முகத்திலை முழிச்சனோ" என்று அலுத்துக் கொண்டார் நண்பர். நானும் பிரச்சனை என்னவாக இருக்கும் என்று அறியும் ஆவலில் என்ன விடயத்தைப் பற்றி கூறுகிறீர் என்று என் பங்குக்கு கேட்டேன். முழுவியலம் பாக்கிறபடியால் எங்கடையாக்களுக்கு ஏதோ தலைபோகிற பிரச்சனையல்லவோ! இப்படி ஏதாவது சங்கதிகளை சும்மா சொல்லிப்போட்டு விட முடியுமே. என்ரை காதுக்குள் முழுக்க விழா விட்டால் எனக்கு மண்டையே வெடித்து விடும் போல இருக்கும். நண்பரை மேலும் கிண்டினேன். விசயம் இது தான் நண்பர் கொஞ்சம் எண்கணித சாத்திரத்தில (நியூமோர்ரலஜி) நம்பிக்கை வைத்திருப்பவர். காலையில் வேலைக்கு வெளிக்கிடும் போதே இன்றைய திகதியைப் பார்த்துவிட்டு இன்று ஒரு பிரச்சனையிலும் மாட்டக்கூடாது என்ற எண்ணத்தில் பிள்ளையார் தொட்டு யேசு வரை எல்லா சாமிகளுக்கும் ஒரு கும்பிடு போட்டுக் கொண்டு காரை எடுத்தவர்தான்: மட்டுமட்டாய் வெளிக்கிட்டு 7மணிக்கிடையில் வேலைக்கு வரவேண்டும் என்று கொஞ்சம் வேகமாய் காரை ஓட்டியிருக்கிறார் இடையில் பொலிசுக்காரர்கள்: நண்பரை பொறுத்த வரை 17ம் திகதி 8 ம் நம்பர் விடுமா! வேகமாய் ஓடியதற்கு தண்டமும் கட்டி தமிழர்கள் என்றாலே இப்படித்தான் கள்ளலைசன்சு அது இது என்று பேச்சு வேறை.... இன்னும் ஒரு படி மேலே போய் நண்பர் என்னிடம் இப்படிச் சொன்னார் "பாரும் இப்ப இரண்டு வருசமாக காரிலை வேலைக்கு வாறன். எத்தனை நாள் இன்றைக்கு வந்ததை விடக் கூட வேகமாக வந்திருப்பன். இன்றைக்கு இந்த 8ம் நம்பர் சனியன் மாட்டி விட்டது." இத்தனைக்கும் நண்பர் படிக்காதவர் அல்ல. யாழ் பல்கலைக் கழகத்தில் காலை வைத்தவர். மாணவர்களுக்கு வகுப்புகள் கூட எடுத்தவர். சகோதரிகளுக்கு வழிபண்ண வாத்தி வேலை சரிவராது என்று 6 வருடங்களுக்கு முன்பே சுவிசுக்கு வந்த பழைய காய்.

இது மட்டுமா இன்று இலங்கை, ஐரோப்பா என்று தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் பழைய ஜாதகக் கட்டுகளையெல்லாம் தள்ளி விட்டு எம்மவர்களுக்கு ஒரு நம்பிக்கை கீற்றாய், வழிகாட்டியாய், "விஞ்ஞானமாய்" கோலோச்சுகிறது எண்கணித சாத்திரம். பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுவதாய் இருந்தால் என்ன திருமணம், சுபகாரியங்கள் போன்ற பல தேவை கட்கும் அவரவரின் பிறந்த எண்: திகதி, மாதம் ஆண்டு என்பவற்றை கூட்ட வரும் முழுஎண் (கூட்டுஎண்) களுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள். காரணம் அப்போது தான் எண்கணித வடிவில் உருமாறியுள்ள அதிர்ஷ்டதேவதை அவர்களுக்கு தன் கடைக் கண்ணை திறப்பாள் என்ற ஒரு நம்பிக்கைதான். இப்போதெல்லாம் எம்மவர்கள் மத்தியில் பெயர் விலாசத்தை கேட்டு தெரிந்து கொள்வதைப் போல உமது பிறந்த திகதி என்ன? கூட்டுஎண் என்ன? என்று கேட்டு தாங்கள் கேள்விப்பட்ட எண்களுக்குரிய தன்மைகள் குறிப்பிட்ட நபர்களுக்கு பொருந்துதா இல்லையா என்று அபிப்பிராயம் சொல்வது ஃபாஷனாகிப் போய்விட்டது.

ஒரு பத்துப் பதினைந்து வருசத்துக்கு முன் எமது நாட்டில் கல்யாணத்திலிருந்து சகல சுபகாரியங்களுக்கும் பழைய சாத்திர வகைகளை நம்பியிருந்த காலம். மத்தியதர குடும்பங்களின் கனவுகளை இலங்கையின் அரசியல் அமைப்பும், பொருளூற்பத்தி முறையும் நனவாக்க முடியாமல் போனதால் எம்மவர்களுக்கு வெள்ளிதிசை என்ற சாதகத்தை நம்புவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. இந்த வெள்ளிதிசை வரும்வரை காத்திருக்க வேண்டும். இது பலருக்கு கவலையையும் சோர்வையும் கொடுத்திருக்க வேண்டும், அது தானோ என்னவோ அவரவரின் பிறந்த எண்களுக்கு ஏற்ப பெயரில் சில மாற்றங்களையும், அதிர்ஷ்ட கற்களையும் தாம் அணியும் உடுப்புக்களையும் எண்களுக்கேற்ப அதிர்ஷ்டமான கலரில் அணிந்து வந்தால் நீங்கள் நினைத்த காரியங்கள் நிறைவேறுவதுடன் உங்கள் வாழ்க்கையை வெற்றிப் பாதையில் மாற்றியமைக்க முடியும் என்ற சேதுராமனின் எண்கணித சாத்திரம் பலருக்கு உற்சாகத்தை ஊட்டிவிட்டது.

இடையில் எம்மவர்களில் பலருக்கு வெளிநாட்டு வாழ்க்கை. ஒரு புறம் காசு சம்பாதித்தால் மறுபுறம் நாட்டில் சீதனத்தொகை, தம்பி தங்கச்சியை கூப்பிட ஏஜென்சிக்காரன் இலட்சக்கணக்கில் ரேட், நாட்டில் யுத்தநிலைமையில் பொருளாதார பிரச்சனைகள், கடன்கள், உழைக்க வந்த நாடுகளில் நிம்மதியற்ற வாழ்க்கை என்று பிரச்சனைகள் ஏதோ ஒரு வழியில் பெருகிக் கொண்டு போகின்றதே ஒழிய முடிவுறுவதாய் தோன்றவில்லை. மீண்டும் கனவுகளில் தானோ காலத்தை

## சஞ்சிகை: மனிதம் (சுவிற்சர்லாந்து)

இரு மாதங்களுக்கொரு முறை சுவிர்சர்லாந்தில் இருந்து வெளிவரும் தமிழ் சஞ்சிகை மனிதம். இதுவரை 16 இதழ்கள் வெளிவந்துள்ளது. அனேக ஐரோப்பிய தமிழ் சஞ்சிகைகளைப் போலவே இதுவும் கலைஇலக்கிய சமூக அரசியல் விடயங்களை தாங்கி வெளிவருகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முக்கிய இடத்தை கொடுத்து கட்டுரைகளையும் விவாதங்களையும் வெளியிட்டு வருகின்றது. இந்த விடயங்களில் மனிதம் ஒரு தேடலை மேற் கொண்டுள்ளதெனச் சொல்லலாம் அதற்கான ஒரு முறையையும் சஞ்சிகை தன்னகத்தே வைத்துள்ளது. ஆக்கங்களைப் பிரசுரிக்கும் போது அது எழுதியவரின் கருத்து என கூறிவிட்டு தன்னை பொறுப்பில் இருந்து விடுவித்து கொள்ள விரும்பவில்லை என்னும் கருத்துப்பட மனிதம் தனது கருத்தை ஒரு இதழில் குறிப்பிட்டுள்ளது கட்டுரைகளை வெளியிடுவதற்கு தனக்குள் ஒரு வரையறையை மனிதம் வைத்திருக்கின்றது. இருப்பினும் சில கட்டுரைகளில் 'மனிதம்' காணாமல் போயுள்ளதையும் காணமுடிகின்றது. போதிய தகவல் கிடைக்காமையும் காரணமாக இருக்கலாம்.

மனிதம் சஞ்சிகையை அறிமுகப்படுத்துவதாயின் அதில் வெளிவந்த சிறந்த கட்டுரை, அல்லது அதன் அடிப்படைக் கருத்துக்களை வெளிக் கொணரக் கூடிய ஆக்கங்களையே பிரசுரிக்க வேண்டும். ஆனால் எமது சஞ்சிகையின் தன்மை, காலம் போன்ற பிரச்சினைகளால் அதுபோன்ற ஆக்கம் ஒன்றை வெளியிட முடியவில்லை. மனிதத்தை அறிமுகப் படுத்தும் நோக்கில் இதழ் 16இல் வெளிவந்த ஒரு ஆக்கத்தை வெளியிடுகின்றோம்.

ஐரோப்பாவில் இருந்து வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகைகளுள் கால இடைவெளியிலும் தரத்திலும் வடிவமைப்பிலும் தரமாக இருக்கும் சஞ்சிகைகளுள் ஒன்றாக விளங்கும் மனிதத்தை இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்தோரினால் வெளியிடப் படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓட்ட வேண்டும் இப்படி மத்தியதர குடும்பங்களின் ஏக்கப் பெருமூச்சு நீள்கிறது. பிரச்சனைகளை முகம் கொடுத்து சரியான வழிகளில் தீர்க்க முடியாமல் எப்பவுமே தப்பியோடல் என்பதே எமது தாரக மந்திரம். இதனால் இருக்கின்ற நிலைமைகளில் மாற்றத்தைக் காணாத போது எதிர்காலம் எப்படியிருக்கும் அதை மட்டும் சரியாக அறிந்து கொண்டால் சிவனே என்று நிம்மதியாக வாழ்க்கையை ஓட்டிவிடலாம். இந்த நிலை இப்போது தோன்றிய ஒன்றல்ல. நீண்ட காலமாகவே மனிதனின் எதிர்காலம் பற்றிய தேடல், குறி சொல்வது, கிளிச்சாத்திரம், கைரேகை, ஜாதகம் என்று இப்போதைக்கு எண்கணித சாத்திரத்தில் நிற்கின்றது. இந்த நிலை பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சரியான வழிமுறைகளை மனிதர்கள் கண்டறியும் வரை தொடரத்தான் போகிறது.

ஐரோப்பியர்களைப் பொறுத்தவரை இவர்கள் மத்தியில் எண்கணித சாத்திரம் என்ற ஒன்று இருப்பதே தெரியாது. சிலருக்கு நட்சத்திரங்கள், கோள்களில் நம்பிக்கை உண்டு அவ்வளவு தான். இருப்பினும் தங்கள் திருமணங்கள் போன்ற சுபமான விடயங்களை எம்மவர் போன்று நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்து இவர்கள் தீர்மானிப்பது இல்லை. தங்கள் வீவு வசதிகள் என்பவற்றிற்கு ஏற்றவாறுதான் தீர்மானிக்கிறார்கள். இவர்கள் பொருளாதார ரீதியில் மேம்பட்டுள்ளதும் சமுதாய ரீதியில் அறிவுடையவர்களாக இருப்பதுமே இதற்கான காரணமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த எண்கணித சாத்திரத்தை நம்புபவர்கள் இதை ஒரு விஞ்ஞானமாக நினைத்துக் கொண்டிருப்பதுதான் பரிதாபத்திற்குரியது. பழைய சாத்திரங்கள் எல்லாம் எங்கோ வெகுதொலைவில் உள்ள கோள், நட்சத்திரத்தைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்த போது இது நடைமுறையிலுள்ள எண்கள் பற்றி கூறுவதால் விஞ்ஞானமாக இருக்கலாம் என்ற நம்பிக்கை சிலருக்கு வருகிறது. இதில் எதுவித உண்மையும் இல்லை. இன்று நடைமுறையில் உள்ள எண்களும் அவற்றின் வடிவங்களும் விலங்கு நிலையில் இருந்து பகுத்தறிவு ரீதியாக மனிதன் நாகரிகத்தை தொட்ட போது பொருட்களை வகைப்படுத்தி அறிவதற்கும் கணக்கிடுவதற்கும் மனிதர்களால் உருவகிக்கப்பட்டவைதான் இந்த எண்கள். இந்தப் படைப்பின் சொந்தக்காரர்கள் புராதன எகிப்தியர்களும், பபிலோனியர்களும், கிரேக்கர்களுமாவர். இவ் எண்களை மனிதர்களுக்காக யாரும் உருவாக்கி தந்து விடவில்லை. இன்று சர்வதேச ரீதியாக பாவனையில் உள்ள எண் வடிவங்கள் அராபியர்களிடமிருந்து பெற்றுக் கொண்டவை தான். இந்த எண்களுக்கு வேறு, வேறு மொழிகள் பேசுவோர் தங்கள் தங்கள் மொழிகளில் அதற்குரிய பெயரையும் வடிவத்தையும் அமைத்துள்ளனர். ஆகவே மனிதர்களின் பிரித்தறியும் தேவையை நோக்காக கொண்டு அறிவுசார் கற்பனையில் உருவகித்து கொண்ட இந்த எண்களை எப்படி விஞ்ஞானம் என்று கூறமுடியும்?

மற்ற சாத்திரங்களை விட இந்த எண்சாத்திரத்தில் பலர் குழம்புவதற்கு ஒரு காரணமுள்ளது. அதாவது நிகழ்தகவு அடிப்படையில் எண் சாத்திரத்தில் அமைந்தபடி சில நிகழ்வுகள் நடைபெறுவதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது. இதை சுலபமாக இப்படி விளக்கலாம். 40 பேர் கொண்ட ஒரு வகுப்பில் கணித பாடத்தில் விசேடசித்தியடைந்தவர்கள் 5 பேர் இருப்பின் எண் சாத்திரரத்தின்படி 1ம் நம்பர் காரர் படிப்பில் கெட்டிக்காரர்கள் என்று வைத்து கொண்டால் அந்த 5 பேரும் 1ம் நம்பரில் பிறந்திருக்கக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அந்த 5 பேரில் ஒருவர் கூடி 1ம் நம்பரில் பிறக்காமல் இருக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இது தான் குழப்பத்திற்கு காரணம். 1ம் நம்பரில் பிறந்த பலர் இருந்தும் அவர்கள் சித்தியடையாமல் போய் விட்டால் எண்ணில் பலருக்கும் நம்பிக்கை இல்லாமல் போய்விடுமோ? இங்கேதான் இவ் எண் சாத்திரகாரர்கள் மற்றொரு பசப்பல் விடுகிறார்கள். கூட்டுஎண் சாதகமாக இல்லை என்பார்கள். அதுவும் சரிதான் என்றால் பெயரைக் கூட்டவரும் எண் சரி இல்லை, அதிர்ட்டகல் அணிந்த மோதிரம் போடவில்லை. அதிர்ஷ்டக்கல் அணிந்த மோதிரம் போடவில்லை, பரீட்சைக்கு அதிர்ஷ்டமான நிறத்தில் உடுப்பணியவில்லை என்று நியாயப்படுத்தல்களை அடுக்கிக் கொண்டே போவார்கள். இவர்கள் வசம் இப்படி சுத்தையான நியாயம் எப்போதும் இருக்கும். எதுவும் பலருக்கு என் சாத்திரம் உண்மையாகத்தான் இருக்கும் என்ற போலிநம்பிக்கையை உண்டு பண்ணும்.

கிட்லரும், காந்தியும் 2ம் திகதியில் பிறந்தவர்கள் என்று கூறி 2ம் எண்காரர்கள் உலகப்பிரசித்தி பெறுவர்கள் என்றும் ஆயுட்காலம் குறுகியது என்றும் கூறுவர். வேடிக்கை என்னவென்றால் 2ம் எண்ணில் பிறந்த எத்தனையோ மில்லியன் மக்களில் எவரும் உலகப்பிசித்தியடையாததையோ, வீரகேசரி மரண அறிவித்தல் பகுதியில் எத்தனையோ 2ம் எண்காரர்கள் 70, 80 வயதுவரை வாழ்ந்து இயற்கை மரணமெய்தியதையோ எம்மவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. உலகை ஆள நினைத்து வெறிபிடித்தலைந்த சர்வாதிகாரி கிட்லருக்கும், அகிம்சைப் போராட்டம் நடத்திய காந்திக்கும் பண்பளவில் உள்ள வேறு பாடுகளை மறைத்து விட்டு பிரபல்யமடைந்த என்ற ஒன்றை மட்டும் தூக்கிப் பிடித்து முடிச்சுப் போடுவது தான் இவர்களின் விஞ்ஞானம்.

சில வருடங்களுக்கு முன்னால் சுவிசில் தமிழர் ஒருவரால் எண் சாத்திரப் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் உள்ள முக்கிய விடயம் இன்றைய தமிழர்களின் இன்னல்களுக்கு காரணம் தமிழர்கள் ஆங்கிலத்தில் தமிழை Tamil என்று பாவிப்பதனால் தான் என்றும் அதை மாற்றி Thamzh என்று எழுதினால் தமிழர்கள் தங்கள் துன்பங்கள் எல்லாம் நீங்கப்பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள் என்று கூறுகிறது. இந்த விஞ் (மெய்) ஞான கண்டுபிடிப்பில் இன்னுமொன்று, சில முன்னேறிய நாடுகளின் பெயர்ப் பட்டியல்கள் போட்டு அவற்றின் இந்த முன்னேற்றத்திற்கு காரணம் அந்த நாடுகளின் பெயர் எண்கள் நல்ல நம்பர்களில் அமைந்திருப்பது தான் என்றாரே பார்க்கலாம். என்னே விஞ்ஞானம்!

இந்த ஐரோப்பியர்கள் சிந்தனையையும் அறிவையும் பெருக்கிக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளவும் காரணமாய் அமைந்த புவியியல் காரணிகளையும், இவர்களால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகம், பின் ஏனைய நாடுகளை காலனியாக்கி செல்வங்களை கொள்ளையடித்துக் கொண்டு வந்தும், மற்றவர்களின் உழைப்பையும் சுரண்டி எப்படி இந்த முதலாளித்துவநாடுகள் இன்றைய நிலைமைக்கு வந்ததென்பதையும் நம்பர்காரர்கள் அறியவில்லை போலும். இவர்கள் அப்பாவித்தனமாக எண்களுக்குள் வரலாற்றை மறைத்து தாங்கள் குழம்பியது மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கு "அட்வைசு" வேறு!

இன்றைய ஒவ்வொரு மனிதனும், சமூகமும், தேசமும் எண்களுக்குள் தான் எல்லாம் அடங்கப்பட்டுள்ளன என்றால் இலகுவாக இந்த என்ன விஞ்ஞானிகள் கூறியபடி தங்கள் நிலைமைகளை மாற்றியமைத்து எங்கேயோ! போயிருக்கலாம்தானே. மனிதர்கள் இப்படி இழுபறி வாழ்கை வாழ வேண்டும் என்பது என்ன தலைவிதியா!

வேதனை தன்னை விலை தந்து யாரும் வாங்கிட நினைப்பாரோ!! ■

S. வசந்தன்

*************************





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மரணங்கள் மதிப்பு மிக்கவை.


சண்முகம் வாத்தி செத்துப் போனார். இனி அவர் இல்லை. ஒரு பிரம்படி இல்லை. குறுக்கும் நெடுக்குமாக நடந்து கல்யாணப் பந்தியில் ஏவல் குரல் கொடுக்கும் ஒரு மடித்துக்கட்டிய வேஷ்டி இல்லை. திருவிழாக் கூட்டத்தை வழிபிளக்கக் கத்தியபடி தேர்வடம் பிடித்து இழுக்கும் ஒரு வேர்வை ஊறிய கரம் இல்லை. ஓய்வு நேரப் பொழுதொன்றில் சாய்வு நாற்காலிக் கைப்பிடியில் ஒரு விரற்தாளமும் ஒரு வாய்ப் பாட்டும் இல்லை. ஒரு வெத்திலைத் துப்பலில்லை. ஒரு செருமலில்லை. வீட்டு முத்தத்தில் பலா இலை குத்தி ஆட்டுக்குட்டிக்குக் கிழித்துத் தீத்தும் அக்கறைமிக்க மேய்ப்பன் இல்லை. யாருக்கோ அப்பா இல்லை. ஒரு கணவன் இல்லை. ஒரு ஸ்கூல் வாத்தி இல்லை. ஊருக்கு ஒரு மனிதன் இல்லை. ஒரு மாலையில் ஒரு குண்டுமணி இல்லை. இல்லை, இல்லை, இனி அவர் இல்லை.

அப்பா... அப்பா.... எங்களத் தனிய விட்டிட்டுப் போட்டீங்களேயப்பா.... இனி ஆர் எங்களுக்கு? நாங்கள் இனி ஆரிட்டைக் கேக்கிறது? சொல்லுங் கப்பா.. ஏனிப்பிடிச் செய்தனீங்கள்? சொல்லுங்கப்பா..... நாங்கள் தனிய அப்பா. பயமாயிருக்கப்பா... பேசுங் கப்பா. பேசமாட்டீங்களா? ஐயோ அப்பா பேசுங்கப்பா.... அப்பா.....

சண்முகம் வாத்தி செத்துப் போனார். இனி அவர் பேசமாட்டார். யார் கேட்டாலும். உலகம் முழுவதும் கெஞ்சிக்கேட்டாலும். பாவம் சண்முகம் வாத்தி. அவர் எவ்வளவு நல்லவர். அவரைச்சுற்றி எத்தனை வளையங்கள். மனைவி, பிள்ளைகள், வயது முதிர்ந்த தாய் தந்தையர், சற்றுத் தொலைவிலே சகோதரர்கள், மருமக்கள், உறவுகள், பந்தங்கள். இன்னொரு பக்கம் பள்ளிக்கூடம், ஆசிரியர்கள், சுற்றி வளைத்துக்கொள்ளும் மாணவர்கள். விளையாட்டுப்போட்டி, பரீட்சை, வருடந்தோறும் . முன்னேற்றங்களின் எடைபார்ப்பு. வெற்றியும் தோல்வியும். விடை பெற்றுப்போபவர்களை வழியனுப்பி, புதிதாய்ச் சேருபவர்களை வரவேற்று மீண்டும் மீண்டும் பாடசாலையின் பழகிய கட்டடங்களுக்கூடாக வளையவந்து, ஒழுகுகின்ற பைப்புகளை இறுகமுடி, ஒவ்வொரு தூணையும் தொட்டுப்பார்த்து, ஏதோ ஒன்றின் மன நிறைவோடு விடுகின்ற ஒரு பெருமூச்சு. ஓ.... இங்கு இவர், மண்ணும் சீமெந்தும், சுண்ணாம்புப் பூச்சும் கொண்ட பள்ளிக்கட்டடத்திலும் உயிர்ப்பையும், சுவாசத்தையும், இதயத் துடிப்பையும் கண்டு கொண்ட பழைய வாத்தி.

இன்னொருபக்கம் நமது பார்வையைத் திருப்பினால்; அந்தத் திருவிழாக் கூட்டத்துள் அவர் புகுவதைக் காண்போம். எமது பார்வையில் இருந்து அவர் தொலைந்து போய் விடடார். மறுபடி அங்கே தொலைவில் என்ன சலசலப்பு? சண்முகம் வாத்தியின் தலை தெரிகிறதா? ஆம். ஓரிடத்தில் அமிழ்ந்து இன்னோரிடத்தில் தலைகாட்டும் டொல்ஃபின் மீன்போல ஒவ்வொரு இடத்திலும் சண்முகம் வாத்தியின் தலை. ஆனால் முழுகி, நீறணிந்து கூட்டத்துள் புகுந்த முகம் மட்டும் இப்போது அப்படியே இல்லை. வேர்த்து, வேர்வையில் சந்தனம் கரைந்து, திருநீறு மறைந்து.... இது ஒரு களை. கோவில் சுவாமி வலம்வந்து இறங்கி விட்டதா? நெற்றி வேர்வையை சுண்டுவிரலின் கேள்வி வளைவால் வழித்தெறித்துவிட்டு, கடலைக் காரியுடன் பேரம் பேசும் சண்முகம் வாத்தியிடம் இனி நீங்கள் தாராளமாகச் சென்று கதைக்கலாம்.

நாங்கள் ஒரு கலியாணவீட்டிற்குள் நுழைகிறோம். வாசலின் வாழைமரங்களும், வீதித்தோரணங்களும், இரவோடிரவாக அக்கம்பக்க வீடுகளிலிருந்து சுமந்துவந்து அடுக்கிவைத்த கதிரைநிரைகளும். கம்களம் போர்த்திய மேசைமேலே குத்துவிளக்கு, ஆரத்தித்தட்டு, கும்பம் பன்னீர்ச் செம்புடன் சந்தனக்கிண்ணம்-நேற்றைய இரவில் வாத்தியின் கெடுபிடி ஒழுங்குபடுத்தி வைத்த வரவேற்பு. அமர்ந்திருக்கும்போது முன்னாலுள்ள கதிரையில் முதுகில் கிறுக்கப்பட்ட குறியொன்றுக்கு அர்த்தம் தேடுவது அனாவசியம். வாத்திக்கு மட்டுமே தெரியும்; எது எந்த வீட்டுக்கதிரை என்ற அடையாளம். சரி வாத்தியின் வெண்கலக் குரல் வரவேற்புக்கூடத்தை கலகலக்கவைக்கிறபோது விந்தையான ஒரு விடயத்தை அவ




சண்முகம் வாத்தி செத்துப் போனார் இனி அவர் பேசமாட்டார். யார் கேட்டாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாளிக்கமுடிகிறதா? அவர்தான் ஒரே நேரத்தில் எத்தனை பேருடன் பேசுகிறார்? பேசிக் கொண்டே வெத்திலைத் தட்டத்தை இழுக்கிறார். நடுவிரலால் சிக்கனமாய் சுண்ணாம்பைத் தொட்டு, வெத்திலையில் தடவி, பாக்குச்சீவலில் ஒரு கிள்ளுப் போட்டு மடித்து, வாயில் புதைத்துக்கொண்டவரை இப்போது நீங்கள் அங்கு காணமாட்டீர்கள். பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையே உருளும் சோற்றுப்பருக்கையைப் பதம் பார்த்தபடி, சமையற் கட்டில் அதட்டுகிறது அவர் குரல். வேலிக்கதியாலின் அடிமரத்துக்கு செஞ்சாந்து பூசுகிற வெத்திலைத் துப்பலுக்குப் பின்பு திரும்பவும் அவர் குரல் சோடனை முடியாத மணப்பெண்ணின் அறையின் மூடிய கதவின் மறு புறத்தில். குறுக்கும் நெடுக்குமாக நடந்து மணிக்கட்டுக் கடிகாரத்தை அடிக்கடி பார்த்து அவசரப்படுத்தும் அவர் இனி தெருவோரத்தில் காரைத் தாங்க வைத்து விட்டு பீடி பிடிக்க தென்னையின் மறைவிற்குப் போய்விட்ட கார்க்காரனைத் தேடித் திரிவார்.

நாம் ஒரு செத்த வீட்டிற்குப் போய்ப் பார்த்தால்.... ஓ கடவுளே! இதுவும் ஒரு செத்தவீடெல்லோ! எங்கள் அதே சண்முகம் வாத்தியினது. அவர் நின்று நடத்தாத ஒரு செத்தவீடு. அதுதான்போலும் களையிழந்து, அலங்கோலப்பட்டு, ஏதோ எதுவோ நடப்பது நடக்கட்டும் என்றவாக்கில் நடந்தேறுகிறது. பாவம் மனிதர். சோகத்தைக்கூட அலங்கரித்து வைக்கின்ற கலை அவரது. இனி ஓய்வெடுக்கட்டும்.

"ஐயோ! எனக்கு ஒன்டுமே தெரியாதே. நான் இனி என்னண்டு கொண்டிழுப்பன்? இப்பிடி ஒரு நாளும் படுக்கமாட்டீங்களே. ஓ கடவுளே. நான் இனி என்ன செய்வன். எனக்கு ஒண்டும் தெரியாதே...."

"அழாதீங்கம்மா, நீங்களே இப்பிடி ஆகிட்டா பிள்ளைகளுக்கு யாரம்மா ஆறுதல்..... அழாதீங்கம்மா."

"ஐயோ! எனக்கு ஒண்டுமே தெரியாதே....."

"என்னம்மா செய்யிறது. விதி! கடவுளுக்கு இரக்கமில்லையம்மா."

"ஓ கடவுளே....."

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ, மானிலத்தே. அழுது என்ன? பாவம் மனுஷன் போயிட்டார்."

"சீ இந்த மனிசனுக்கு இப்பிடி ஒரு விதி வந்துதே!"

"அதுதானே, நேற்றுக்கூட பிலாக்காய் அறுக்கிறதுக்கு, தானும் மரத்திலை ஏறினவராமே."

"மனிசருக்கு சா எப்பிடியெல்லாம் வருகிது பாத்தீங்களே!"


"என்னைக்கேட்டா சண்முகம் வாத்திக்கு வந்தமாதிரிச் சா தான் எனக்கு வரவேணுமெண்டு சொல்லுவன். சிரிச்சுக்கொண்டு இருக்க வேணும். புட்டெண்டு போயிட வேணும்– நிம்மதியான சா. படுக்கையிலை கிடந்து இழுபட்டுச் சாகிற சாவும் ஒரு சாவே."

"நல்லாய்ச் சொல்லுவீர் நீர், நீர்மட்டும் சொகுசாய்ப் போயிட்டா சரியெண்டு பாக்கிறீர். ஆனா உம்மை நம்பியிருக்கிறதுகளின்ரை கதி....? அதுகள் கிடந்து உத்தரிக்கிறதோ."

"அதுக்கில்லை சாகக்கை நிம்மதியாய்ச் சாகவேணுமெண்டு சொன்னன்."

"நிம்மதியான சாவெண்டால் எது காணும்? இருந்தாப்போல செத்துப் போறதே? நான் வாழுறவரைக்கும் ஒழுங்காய்ச் சீவிச்சன், என்ரை கடமைகளை எல்லாம் செய்து முடிச்சிட்டன் எண்ட நிறைவோட சாகிற சாவிலைதான் நிம்மதியிருக்கு."

மனிதன் தான் சுதந்திரமானவன் என்று விளம்பிக்கொள்ள எந்த உபாத்யதையும் உடையவனல்ல. அவன் விலங்குகளைப் போல, காட்டிலே, யாரதும் உதவியற்று மலங்க விழித்தபடி தனியே பிறக்கவில்லை. அல்லது குந்திதேவி கைவிட்டு அனுப்பியதுபோல் தெப்பத்தில் மிதந்து ஆற்றோரம் ஒதுங்கிய அனாதைக் குழந்தையுமல்ல. பெற்றோரும், சுற்றமும், சமுதாயமும், நாடும், ஏன் உலகமுமே அவனுக்காக ஒரு தொட்டிலோடு காத்திருந்தது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் மனித இனம் வேர்வையும், கண்ணீரும், இரத்தமும் சிந்தி, இயற்கையோடு நடத்தி வந்த போராட்டத்தின் வெற்றிகள், அவனெதிரே படைக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையின் ஆரம்பத்திற் காய் கல்லைத்தட்டி நெருப்பைத் தேடவும், சில்லும் அச்சாணியும் கண்டறிந்து ஒரு வண்டில் செய்யவும், எந்தத் தேவையும் அவனுக்கு இல்லை. வெறும் பருப்பொருட்களால் மட்டுமின்றி, அவனைச் சுற்றி பந்தம், பாசம், உணர்ச்சிகள் நிறைந்த உறவுகளாலும் பின்னப்பட்ட ஏணையினுள்தான் அவன் ஏந்தப்படுகிறான். எனவே நிச்சயமாக அவனுக்கு ஒரு கடப்பாடு உண்டு. இந்தக் கடமைகளை யாரும் அவனுக்கு கட்டளையிட்டு நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கப் போவதில்லை. அது முற்றுமுழுதாக அவனது மனச்சாட்சிக்கு





மண்ணும், சீமெந்தும் சுண்ணாம்பு பூச்சும் கொண்ட பள்ளிக் கட்டடத்தில் உயிர்ப்பையும், சுவாசத்தையும் இதய துடிப்பையும் கொண்டு வந்தவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடப்பட்டுள்ளது. நீ உன் குடும்பத்திற்கு என்ன செய்தாய்? சமுதாயத்திற்கு என்ன செய்தாய்? நாட்டுக்கு என்ன செய்தாய்? இவ்வுலகத்திற்கு என்ன செய்தாய்? என்ற கேள்விகளின் முன்னால் ஒவ்வொரு மனச்சாட்சியும் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளது. இதில் பலர் முதற் கேள்விக்குள்ளேயே அடங்கிப் போகின்றனர். ஒரு சிலர் கடைசிக் கேள்வி வரை பதில் கூறக்கூடியவர்களாக மிளிர்கின்றனர். உயர்ந்த மனிதன் யார் தாழ்ந்த மனிதன் யார் என்ற கேள்வியில் ஒருவன் தனது கடப்பாடுகளில் எதுவரை பங்காற்றினான் என்பதைப் பொறுத்துத்தான் மதிப்பிடப்படுகிறானேயொழிய, பிறப்பாலோ, செல்வத்தாலோ, அதிகாரத்தாலோ அல்ல. இஃதிருக்க ஒருவன் தனது கடப்பாடுகளை உதாசீனம் செய்து தான் சுதந்திரமானவன் என்று பீற்றிக் கொள்வானாயின் அவனையிட்டு எள்ளி நகைப்பதைத் தவிர வேறெதுவும் செய்வதற்கில்லை.




பாவம் சண்முகம் வாத்தி செத்துப்போனார். இந்த மரணம் என்பதுதான் எத்தனை வலியது. எவ்வளவு கொடியது, நியாயமற்றது, ஈவிரக்கமற்றது. ஆனாலும் இந்த மரணம் என்பது உண்மையில் என்ன? மூச்சு நின்றுவிடுவதா? சிந்தனை நின்றுவிடுவதா? பலரது சிந்தனையோ மூச்சுள்ளபோதும் செத்துவிடுகிறதே. சிலரது சிந்தனையோ மூச்சு நின்றுவிட்ட பின்னும் வாழ்கிறதே. அப்படியானால் மரணத்திலும் இரண்டுவகை உண்டோ? ஆம். மலையிலும் பெரியசா என்றும் இறகிலும் இலேசான சா என்றும் இரண்டு வகை உண்டு. தனக்கென்று இல்லாமல் சமூகத்திற்காக, ஒரு இலட்சியத்திற்காக என்று வாழ்ந்து சாபவனுடைய சா மலையிலும் பெரிதாகிவிடுகிறது. ஆனால் இறகிலும் இலேசானவனாகச் சாபவனோ எப்படிச் சாகிறான்? சமூகப் பிரக்ஞையே அற்று சதா தன்னைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டு, மனவிகாரங்கள் இட்டுச்செல்லும் அற்ப ஆசைகட்காய் அலைந்து திரிந்து, தினமும் உண்பதுவும் உறங்குவதுமாய் வாழ்நாள் முழுக்கக் கடத்திவிட்டு ஒருநாள் ஒரு தெருநாயைப் போல செத்துப்போகிறான்.

"நீங்கள் சுடலை வரை வாறிங்களோ....?"

"இல்லை நான் இடையில திரும்பிறன். வீட்டிலை திருத்தவேலை கொஞ்சம் நடக்குது. நான் இல்லாட்டி ஏதும் திருகுதாளம் பண்ணிப்போட்டு நிப்பாங்கள்."

**சண்முகம் வாத்தியார் சாதாரண மனிதன்தான் ஆனாலும் ஏதோ சில வகைகளில் சமூகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளார்......**

"சொன்னாப்போல, மோனுக்கு கலியாணம் பேசிறதாய்க் கேள்வி....."

"அது சும்மா ஒரு கதையில கிடக்குது. நான் இப்ப ஏன் அவசரமெண்டு பாக்கிறன். உவ தாய்க்காறிதான் தெரியாதே......"

"அப்ப மோன் கனடாவால வ்ாறாரோ?"

"இன்னும் ஒண்டும் முற்றாகேல்ல."

"குறைநினையாதையுங்கோ, நீங்கள் சீதன விசயத்தில கொஞ்சம் கடுமையா நிக்கிறதாய்க் கேள்வி....?"

"சனம் கதைக்கும் காணும். அவன் உதொண்டும் வேண்டாம் எண்டுதான் சொல்லுறான். கனடா உழைப்புக்கு உவையின்ரை சீதனக்காசு எந்த மூலைக்கு? எண்டாலும் ஒரு காலத்தில ஊருக்கு வந்து போறதெண்டால், இருந்து ஆறிப்போறதுக்கு ஒரு வீடு வாசலெண்டு ஏதும் இருக்கத்தானே வேணும். பெரியவை எண்டு இருக்கிற நாங்கள்தானே உதுகளைப் பாத்துக்கீத்து செய்ய வேணும். உதக்கதைச்சா, நான் ஏதோ கடுமையா நிக்கிறதாய் உவையின்ர கதை. இப்ப ஆர் காணும் சீதனம் வாங்கேல்லைச் சொல்லும்.....?"

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று கூறி வைத்தார்கள். ஆனால் திரவியம் தேடத் திரைகடல் ஓடிய பட்டணத்தடியாரோ, முடிவில் "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே." என்று ஓலைத்துண்டில் எழுதி அனுப்பினார். எத்தனை சுள்ளிகள் போட்டாலும் அத்தனையும் பொசுக்கி "ஆ", "ஆ" என்று வாய்பிளக்கும் தீராப்பசிகொண்ட தீயினைப் போல எங்கள் பொருளாசையும் கொழுந்துவிட்டு எரிகிறது. வாழ்க்கையின் அர்த்தங்கள் அந்த நெருப்பில் பொசுங்கிப் போகிறது.

ஆனால் வாழ்வு என்பது அர்த்தம் மிக்கது. பெறுமதி வாய்ந்தது. அதன் அர்த்தம் அந்த வாழ்க்கை எப்படி வாழப்படுகிறது என்பதால்தான் துலங்குகிறது. ஒரு வீணை என்பது என்ன? ஒரு மரத்துண்டும் இரும்புக் கம்பிகளும் சேர்ந்த சடப்பொருளா? இல்லை, அது அற்புதமான ராகங்களை மீட்டுகிற கலைப்பொருள். ஆனால் அது எப்படி மீட்டப்படுகின்றது என்பதைப் பொறுத்துத்தான் அதன் அற்புதங்கள் புலப்படுகின்றன. மீட்டப்படாத வீணை விறகுக்குச் சமன். வாழ்க்கையும் எவ்வாறு வாழப்படுகிறது என்பதால்தான் அது அர்த்தம் பெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகழ்பெற்ற எழுத்தாளரான ஒஸ்தி ரோவ்ஸ்க்கி எழுதினார் - "மனிதனது மதிக்கமுடியாத இனிய உடைமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒருதடவைதான் வாழமுடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கி விட்டேன் என்ற வருத்தம் வதைப்பதற்கு வாய்ப்பில்லாத வகையில் அவன் சீராக வாழவேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவுதேடினேன், என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழ வேண்டும். உலகத்தின் தலைசிறந்த இலட்சியத்திற்காக, நான் என் வாழ்வு முழுவதையும், சக்தி அனைத்தையும் அர்ப்பணித்தேன், என்று இறக்கும்போது கூறும் உரிமை பெறும் வகையில் அவன் வாழ வேண்டும். திடீர் நோயோ, சோக விபத்தோ வாழ்வுக்கு வெடிவைக்கக் கூடுமாதலால் மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

சண்முகம் வாத்தி செத்துப் போனார். சண்முகம் வாத்தி ஒரு சாதாரண மனிதர்தான். ஆனாலும் அவர் ஏதோ சில வகைகளில் தன்னைச்சுற்றிய சமூகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளார். சமூகம் என்றால் இனம், நாடு, உலகம் என்று விரிந்ததாக இவருக்கு இல்லாவிட்டாலும் ஏதோ தன்னைச் சுற்றியுள்ள சூழல் என்ற அளவிலாவது விஸ்தாரித்துத்தான் இருக்கிறது. இந்தமட்டில் இவர் ஒரு தேவையுள்ள மனிதர். குறைந்தபட்சம் குடும்பம், உறவினர், அயலவர், பள்ளிக்கூடம் இன்னும் சொல்லப்போனால் கோவில் வாசிகசாலை என்றிருக்கக்கூடிய ஒரு சில கிராமத்து மையங்களான இவற்றைப் பொறுத்தவரையிலாவது. இந்தத் தேவையுள்ள மனிதனின் வாழ்வை இயற்கை விட்டுவைக்கவில்லை. ஒரு செல்துண்டோ, துப்பாக்கிக்குண்டோ, நிலக்கண்ணி வெடியோ அல்ல, வெறும் இயற்கைதான். தவிர்க்கமுடியாததுதான். ஆனாலும் இந்த இழப்பு தாங்கக் கூடியதாக இல்லை.

"பாவத்தின் சம்பளம் மரணம்" என்று கூறுகிறது பைபிள். "ஆண்டவனால் கொடுக்கப்படும் தண்டனை" அது என்பது இதற்கு அர்த்தமாகிறதோ? அப்படியானால் இன்று மனிதனே அந்தத் தண்டனையைக் கொடுப்பதற்கான அதிகாரத்தை தனது கையில் எடுத்துக் கொண்டானே! ஒரு மனிதனின் இயற்கையான இறப்புக்கூடத் தாங்கமுடியாததாய் இருக்கும்போது மனிதனாலேயே மனிதன் கொல்லப்படுவதென்றால் அந்த இழப்பின் தாக்கம் எத்தகையதாக இருக்கும்? பாவத்தைப் பற்றியும், புண்ணியத்தைப் பற்றியும், வாழ்வின் அர்த்தங்கள் பற்றியும் இனி எங்கு பேசுவது? உலகின் அனைத்து வல்லுனர்களுமாக சேர்ந்தும் ஒரு முடிமயிரைத்தன்னும் உருவாக்க முடியாதிருந்துகொண்டு, உலகத்தையே அழித்துவிட வல்ல அணுகுண்டுகளைத் தயாரித்து விட்டதாக மார்தட்டிக் கொள்வதை எண்ணி அழுவதா சிரிப்பதா? இறுதியில், கோரைப் புற்களைப் பிடுங்கி, அடிபட்டு மடிந்த யாதவ குலம் போல் மானுடரும் அழிவரோ? உலகிலேயே தனது இனத்தைத் தானே அழிக்கும் ஒரேயொரு விலங்கினம் மனிதனாக மட்டுமே இருக்க முடியும். அதைத்தான் அவன் பகுத்தறிவு என்று மெச்சிக்கொள்கிறானோ?

"சண்முகம் வாத்தி நல்ல மனிசர், பாவம் வாழவேண்டிய வயசில போயிட்டார்."

> மரணங்கள் துச்சமானவையல்ல மதிப்பு மிக்கவை.
> வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுங்கள்.

"கவலைப்பட்டுத்தான் என்ன? உதைப்போல நாங்கள் இப்ப எத்தினையை இழந்துபோட்டு நிக்கிறம்? நாளாந்தம் சாவுதானே? சின்னப் பெடியங்கள், வாழ்க்கையை என்னவெண்டு, தெரியாததுகள் எத்தினை எத்தினையாய் அழிஞ்சு போகுதுகள். ஒரு சந்ததியே அழியுது. எதுக்கெண்டு நாங்கள் கவலைப்படுறது?"

"எத்தனையோ நடந்திட்டுது எண்டிட்டு எதுக்குமே கவலைப்படாமல் போயிட ஏலுமே?"

"ஆனாலும் நாங்கள் எல்லாத்தையும் தாங்கித்தானே ஆகவேணும்."

"தாங்கிறதெண்டிறது என்ன காணும்? போனாப் போ எண்டு விடுறதோ? இல்லாட்டி எதெண்டாலும் நடக்கிறது நடக்கட்டும் எண்டு தன்ர சோலியைப் பார்க்கிறதோ? முந்தியெண்டா எங்கயேனும் அசம்பாவிதம் எண்டு ரேடியோ சொன்னால் நாங்கள் என்னவோ ஏதோ எண்டு பதறிப்போய் நிப்பம். இப்பவெண்டா கொஞ்சம் தலையைத் தூக்கி எங்கையாம் எண்டு கேப்பம். அது எங்கட ஊரிலை இல்லை எண்டவுடன சரி கிடக்கட்டுமெண்டிட்டு எங்கடை பாட்டிலை இருப்பம். இழப்புகளுக்கு கவலைப்படாமல் போவமெண்டால் பொறுப்பிழந்து போவம். கவலைப்படாமல், அக்கறைப்படாம வெறுமனே இழப்பைத் தாங்கிக் கொண்டிருக்கிறம் எண்டிறது போலி காணும்."

ஊர்வலம் புறப்பட்டுவிட்டது. உணர்ச்சிகளதும் ஓலங்களதும் உச்சத்திலிருந்து இயந்திரத்தனமாக பிரித்தெடுக்கப்பட்ட சண்முகம் வாத்தியாரின் அலங்கார உடல், அலையால் இழுத்துச் செல்லப்படும் ஒரு மரக்கட்டைபோல மெதுவாக நகர்கிறது. தங்கள் கடமையாக நினைத்து வழியனுப்புவதற்காக கூடச் செல்லும் மனிதக்கூட்டத்தினூடே மௌனமான ஒரு உணர்வலை வியாபித்திருக்கிறது.

"காயமே இது பொய்யடா!
காற்றடைத்த பையடா!
உழுத்த நரம்பும் வெழுத்த தோலும்,
இழுத்துப் பட்டின பையடா!"

என்றாவது ஒருநாள் என்று எழுதப்பட்டுவிட்ட அந்தத் தீர்ப்பை, இது போன்ற மரண ஊர்வலங்கள்தான் மனிதனுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்துகின்றன. பதில் தெரியாத இந்தக் கேள்விக்கு முன்னால் மௌனமாகிவிடும் மனிதன், பொருள் தெரியாத சொல்லொன்றை "விதி"யென்று கூறிக்கொண்டு சமாதானமாகிவிடுகிறான். இந்த வேளையில் உதிக்கின்ற சுடலை ஞானமும், வீடு திரும்பித் தலை முழுகுவதோடு பறந்து போய்விடுகிறது. வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறிவிடுகிறது.

சண்முகம் வாத்தியின் கதை இத்தோடு முடிந்துவிடுகிறது. ஒரு உணர்ச்சி ததும்புகிற, சுவைமிக்க கதையாய் தீட்டிக்கொடுத்து வாசகர்களை அழவைக்காமல், அல்லது சிரிக்க வைக்காமல் அது வேறு எதையோ பேசிவிட்டு ஓய்ந்துவிட்டது போல இருக்கிறதல்லவா? சிந்திக்க வைக்கலாம் என்று எத்தனித்துப் பார்த்தது, அவ்வளவுதான். விடைபெறும்போது மனிதர்களைப் பார்த்து திரும்பவும் கூறுகிறது: "மரணங்கள் துச்சமானவையல்ல, மதிப்பு மிக்கவை என்றாக்குங்கள். வாழ்க்கைக்கு அர்த்தங்கொடுங்கள்." ■

- மதுரகவி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மழலையாய் மழலைகளுக்கு.......

என்னை விட்டுவிடுங்கள்,
என் பாடல்களை
உங்களுக்குப் பாடிக்காட்டுகிறேன்.
நான் விரும்பும் வார்த்தைகளை
எழுத விடுங்கள்.
என்னையும்,
என் கனவுகளையும்
விட்டு விடுங்கள்.
என் விலா எலும்புகளுக்கிடையே...
தென்றலைப் போல் மிருதுவான
என் இதயமும்,
கைதியான என் நேசமும்.....

என்னை விட்டு விடுங்கள்
தோட்டத்துப் புற்களுடன்
நடனமாடவேண்டும்!
இரவு எனும் ஏட்டில்
சூரியனை வரைய வேண்டும்;
அது..
உறங்கிப்போன மெழுகுவர்த்திகளை
எழுப்பிவிடலாம்!
என்னை விட்டு விடுங்கள்,
நான் விரும்பியவாறு இருக்கவேண்டும்,
ஒளியேற்ற வேண்டும்!
மரங்களுக்கிடையே...,
காற்றின் கைகளுக்கிடையே....,
சிறகடித்துப் பறக்க விரும்பும் என்னை
விட்டுவிடுங்கள்!

நாளை,
விருட்சமாகப் போகும் விதைகளே....,
பிஞ்சு நெஞ்சங்களே.....
மௌனத்தைக் கலைக்கும்,
உங்கள் சலங்கைச் சங்கீதச் சிரிப்பை
நான் விரும்புகிறேன்.....
கண்ணின் கருமையில் வளரும்....,
வெறுமையைப் பாடல்களால் நிரப்பும்
உங்களின் அந்தச் சிரிப்புகளை
நான் மிகவும் விரும்புகிறேன்.

ஒரு வாளாக....., ஒரு கோடரியாக....
எங்களைப் பாதுகாக்கும்,
ஒரு நெருப்புச் சாட்டையாக
எப்போதும் நிங்கள் இருக்கவேண்டும்.

விலங்குகள் இறுக்கினாலும்,
தடைகள் குறுக்கிடினும்,
சத்தியத்தைப் பேசுகின்ற
உயர்நூலாக
நீங்கள் இருக்கவேண்டும்.

மல்லிகைத் தோட்டமாக.....,
தீங்குகளை, இழிவுகளைவிட்டும்
நீங்கியவர்களாக.....,
சுதந்திரமான சிறுவர்களாக, சிறுமிகளாக
நீங்கள் இருக்கவேண்டும் என
நான் விரும்புகிறேன்.

அரபுமூலம் : ஜமாலுல் காஸாஸ்
தமிழ்வடிவம் "ஷஸ்நி"

# விழித்திருப்பு.

மரணமும் துப்பாக்கியும்
சேர்ந்தே திரியும்
தெருவோரத்து வீடொன்றில்
மூச்சுவிடவும் அஞ்சிய
இரவின் நிசப்தத்தோடு நான்.

தூக்கத்தில் புலம்பும்
வயதான அம்மா
சலனமற்று உறங்கிய தங்கை
புத்திரபாசத்தில்
மௌனமாய் அழுதபடி அப்பா.

மனிதம் உறங்கிப்போன
ஒரு தேசத்தில்
விழித்தபடி
மர்ணத்தின் நிழலோடு
யுத்தம்செய்ய
நம்பிக்கையைத்தேடுகிறேன்.

தெருவோரத்தில் வாகன இரைச்சல்
சிலவேளை அவர்கள் ?
பயத்தின் விழிப்புக்குள் நான் !
வாகனம் போனது.
வேப்பமரம் அசைந்து
ஒரு பறவை சிறகடித்து அலறிற்று.
மறுபடி நிசப்தம்.
நிலவைக்கடந்து முகில்கள் போயின.

விமானம் வட்டமிட்டது.
வீட்டில் யாருமில்லை
பங்கருக்குள் புகலிடம்.
நான் மட்டும் படுக்கையில் புரண்டேன்.
மரணம்....!
எப்போதாவது அது வரலாம்.
ஆனால்
அவர்கள் வராமல் !
அர்த்தங்களோடு !

துப்பாக்கிபற்றி
அவர்கள் பேசியபோது
நானும் பேசினேன்.
துப்பாக்கியோடு
அவர்கள் அலைந்தபோது
நான்
இன்னொன்றை யோசித்துக்கொண்டிருந்தேன்.
மக்களை !


இன்னும்
நான் உறங்கவில்லை.

- சிவானந்தன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அலைகடல் நடுவே ஓர் அகதி

மெல்ல மெல்ல கடலின் அலையுடன்
படகு அசைந்து போகுது.
கண்ணீர் துளிகள் கடலின் நீரில்
கரைத்து மறைத்து போகுது.
என்னை ஈன்ற நாடுமெங்கோ
தள்ளித்தள்ளி ஓடுது.
விண்ணில் இருந்தோ ஆயிரம் கண்கள்
வேடிக்கை பார்க்குது.

கரிய கடலின் எறியு மலையின்
துளிகள் சிதறி கண்ணில் வீழந்தது,
விழிகள் எரிவை மறுத்தது.
மின்னல் கீற்றின் ஒளியிற் கூட
மறையும் நாட்டைப் பார்த்திடவேண்டும்,
மனது கிடந்து துடித்தது.
காற்றினோலம் காதிலறைந்து
அகதி நீயென உரைத்தது.

எனது வீட்டின் முன்றலிலே ஓர்
எலும்பிச்சங்கண்டு
அது நீரின்றி வாடும்.
ஐயோ என் குட்டியாடும்
குலைதேடி இனி யாரிடம் போகும்?
நான் வளர்த்த
நாயும் வாசலில்
எலும்பாகிச்சாகும்.

கொடூர வெறியில் மனிதம் மறைந்தது.
குடும்பமெல்லாம் குலைந்தே பறந்தது.
அன்பு முகங்கள் எங்கே?..... எங்கே?.....
நானுமொரு துரும்பைப்பற்றி
கடலில் மிதந்தேன்.

ஓ! மெல்ல மெல்ல கடலின் அலையுடன்.....

-மதுரகவி-

## அழைப்பிதழ்

இன்று எனது
வலது கண் துடித்தது.

மரணத்தின் சமிக்ஞை
எந்தக் கண்ணில் என்பதை
மனம் மறந்திருந்தது.

உன்னையில்,
உறங்கையில்,
கால் பதிக்கையில்,
மலங் கழிக்கையில்,
எந்தக் கணத்திலும்
ஒரு அழையா விருந்தாளியாக
நீ வருவாயா?


எங்கள் குடும்பத்தில்
யார் பெயரை
உன் இதழில் குறித்தாலும்
முகம் சிதைந்து,
துண்டு துண்டாய்,
என்புகளாய்,
சதைகளாய்,...
ஓ! வேண்டவே
வேண்டாம்.

உனது காதுகள்
செவிடு.

எனினும் ஒரே யொரு
வேண்டுகோள்.

நண்பனது புதைகுழியில்
மலர்வளையத்தைச்
சாத்திவிட்டு வரும்வரை
மரண அழைப்பிதழை
தயை கூர்ந்து
முடிவை!

-சுட்டா-





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


டோற்முண்ட் நகரில்
இலாபகரமான கொள்வனவு!!

* * * * அனோஜன்ஸ் * * * *

திருமணப்புடைவைகள் * கல்யாணநகைகள்
சிங்கப்பூர் உடைகள் * காதணிகள், கைவளையல்கள்
சிறுவர் ரெடிமேட் உடைகள் * தாலி, கொடி மற்றும்
எவர் சில்வர் பொருட்கள் * மங்கையர் கண்கவரும்,
பல சரக்கு சாமான்கள் * ஆடவர் விரும்பும் ஆபரணங்களை
மலிவு விலையில் வழங்குபவர்கள் * சகாய விலையில் தருபவர்கள்

ஓடியோ, வீடியோகசற்றுக்கள், சீ. டி. டிஸ்கற்றுகள்
வாடகைக்கும் பெற்றக்கொள்ளலாம்.

நீங்கள் விரும்பும் டிசைன்களில் ஓடருக்கு நகைகள் செய்து கொடுக்கப்படும்.

ம் நிறைந்த பொருட்களை

மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**ANOJANS**

LINNCKRODT STR - 108
DORTMUND - 1
RMANY

T.NO - 0231/814224
T.FAX 0231/837180

DCRTMUND HAUPT BHANHOF லிருந்து 41-FREDENBAUM, 47-BRAMBAUER, U"BHANல் வந்து MUNSTER-STR தரிப்பில் இறங்கவும், காரில் வரும்போது OBERHAUSEN-45ல் வந்து HUCKARDE AUSFAHETல் உள்ளிறக்கி HAFEN வழியாக வரவும். ஓடியோ, வீடியோகசற்றுக்கள், சீ.டி.டிஸ்கற்றுகள் வாடகைக்கும், விலைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.


Published by "Aruvi Publisher", 196 New Moor Street, Colombo 12. and
Printed by C.R.C Press, 119 University Road, Rattanapitiya, Boralesgamuwa.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "கொல்"

வெளுறிய முகப்பரப்பில்
உறைந்து போனது விழி!

பூக்களும், நிலவும், கனவுகளும்
கையூடு உதிர்ந்து கொட்ட
கிடுநடுங்கி,
ஒரத்தே ஒதுங்கி,
உயிருக்காய் இறைஞ்சியது
வாழ்க்கை.

எதிரே மரணம்.

இரக்கமற,
அதன் வார்த்தைகள் ஒலித்தன.

*"வாழ விரும்பின்......"*

இரவின் மௌனமும்
அசைவற்ற புற்களும்
ஆமோதிக்க,
சில்லிட வைக்கும்
சொற்கள் பிறந்தன.

*"கொல்"*

காதின் ஊடே
மந்திரம் போல
வார்தைகள் புகுந்து
மூளையைப் பற்றின.

*"நண்பனை,*
*உடன் பிறப்பை,*
*எங்கேனும் ஒரு*
*முகம் தெரியாக் குழந்தையை.*
*இலையேல்......"*

கேழ்வி எழவில்லை.
முற்றுப்புள்ளி விழுந்தது
வார்த்தைக்கு.
செவிமடுக்க,
உயிர் மட்டும் இன்னும்
உறையாதிருந்தது.

*"கொல்லப்படுவாய்."*

விக்கித்து நின்றது காற்று!

- மதுரகவி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்